Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 211
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 25 றஜபு 8 வியாழக்கிழமை (10-9-70)

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# பம்பாயிலிருந்து புறப்பட்ட விமானம் திசை திருப்பப்பட்டது

## 103 பிரயாணிகளுக்கும் அபாயம் இல்லையாம்

பம்பாய், செப். 9

பம்பாயிலிருந்து லண்டன் நோக்கிச் சென்று கொண்டிருந்த விமானம் ஒன்று பலவந்தமாகத் திசை திருப்பப்பட்டு பேருட் கொண்டுசெல்லப் பட்டது. அதில் 103 பிரயாணிகள் இருந்தனர்.

பேருட் விமான நிலையத்தில் இறங்கிய அந்த விமானம் சிறிது நேரத்தில் எண்ணெய் நிரப்பிவிட்டு உடனடியாகவே புறப்பட்டுச் சென்றது. ஆயினும் விமானம் எங்கே கொண்டு செல்லப்படுகிறது என்பது பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை. பிரயாணிகள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாகக் கூறப்பட்டது.

சர்வதேசவிமானங்கள் பல அடிக்கடி திசைதிருப்பப்படுவதை அடுத்து பல்வேறு சர்வதேச விமான நிலையங்களிலிருந்தும் விமானங்கள் புறப்படுவதற்குமுன்னர் பலத்த சோதனைக்குட்படுத்தப் படுகின்றன, அமெரிக்கா லண்டன் போன்ற இடங்களிலுள்ளவிமான நிலையங்களில் உள்ள விமானங்களில் தீவிர முன்னேற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இதனால் விமானங்கள் குறித்த நேரத்தில் புறப்படுவதில்லை.

பம்பாயிலிருந்து விமானம் புறப்பட்ட சிலநிமிடநேரங்களில் இனம் தெரியாத சிலர் விமானியைப் பயமுறுத்தி விமானத்தை திசைதிருப்பிய தாக அறிவிக்கப்பட்டது

# ரூ. 250 லட்சம் பெறுமதியான பஸ் உதிரிப்பாகங்கள் தேக்கம்

## பாவனைக்கு உதவாதது என்கிறர் இ. போ. ச. அதிகாரி

கொழும்பு, புதன்

**தற்போதைய பாவனைக்குத் தேவைப்படாத 250 லட்சம் ரூபா பெறுமதியான பஸ் உதிரிப்பாகங்கள் இ.போ.சபையில் தேங்கிக்கிடக்கின்றன.**

நாடுபூராவும் சேவையில் ஈடுபடுத்தப்படமுடியாதநிலையில் ஏராளமான பஸ்கள் பழுதடைந்த நிலையில் இருந்தபோதிலும், இந்த உதிரிப்பாகங்களை அவற்றிற்கு உபயோகிக்க முடியாமல் இருப்பதாக இ போ ச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

சமீபகாலங்களில் உதிரிப்பாகங்கள் இறக்குமதியில் ஏற்பட்ட குளறுபடியே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

வருடமொன்றுக்கு 300 லட்சம் ரூபா பெறுமதியான உதிரிப்பாகங்கள் இ. போ. சபைக்கு தேவைப் படுவதாகவும், கடந்த வருடம் இறக்குமதி செய்யப் பட்ட 170 லட்சம் ரூபா பெறுமதியான உதிரிபாகங்கள் உபயோகிக்க பொருத்தமி[illegible]மல் இருப்பதாகவும் அந்த அதிகாரி கூறினர்.

நூற்றுக் கணக்கான பஸ்கள் பழுதடைந்திருந்தும், அவற்றைத் திருத்தி, பொது மக்களின் போக்குவரத்துக் கஷ்டத்தை உடனடியாகத் தீர்க்க முடியாமலிருப்[illegible]ற்கு இதுவே முக்கிய காரணமென்று கூறப்பட்டது.

# இந்துசமுத்திரத்தில் அணுஆயுத பரிசோதனைக்கு தடைவேண்டும்

## லுசாக்கா மகாநாட்டில் ஸ்ரீமா

லூசாக்கா, செப். 9

'இந்து சமுத்திரத்தை அணுவாயுதப் பரிசோதனை தடுப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டும்' என்று இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா லுசாக்காவில் இன்று நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் மகாநாட்டில் பேசும்போது கேட்டுக் கொண்டார். இன்று அவர் இரண்டாவது பிரதிநிதியாகப் பேசினர்.

கூட்டுச்சேரா நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து விட்டதனால் பிரச்சினைகள் தீர்ந்து விடுமென எனது நாடுகருதவில்லை. பொருளாதார சுபீட்சத்தைக் கருதியே நாடுகள் செயல் பட வேண்டும், அதற்காகப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினர்.

நேபாள மன்னர் மகேந்திரா பேசுகையில், சீனவின் ஒத்துழைப்பின்றி உலகில் சமாதானத்தை நிலைநாட்ட முடியாது என்றார்.

### சிகானுக் கோரிக்கை

பதவி நீக்கஞ் செய்யப் பட்ட கம்போடிய இளவரசர் சிகானு மாநாட்டுக்கு அனுப்பி வைத்துள்ள பகிரங்கக் கடிதம் ஒன்றில் தாம் அமைத்துள்ள அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

# கிளுக்கொல்லை சம்பவத்துக்கு வடக்கில் கண்டனக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

பதுளை கிளுக்கொல்லைத் தோட்டத்தில் நடந்த பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்ட இரு தொழிலாளருக்கும் அனுதாபம் தெரிவிக்கு முகமாகவும் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்தும் வடஇலங்கையிலுள்ள சகதொழிற்சங்கங்களையும் அழைத்துப் பொதுக் கூட்டமொன்றை நடத்துவதற்கான ஒழுங்குகளை இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்தவர்கள் மேற் கொண்டுள்ளனர்,

## அமைதிப் பேச்சு இஸ்ரேல் வாபஸ்

நியுயோர்க், செப் 9

மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதிலிருந்து தற்காலிகமாக இஸ்ரேல் வாபஸ் பெற்றுக் கொள்ளுமென இஸ்ரேல் நாட்டின் ஐ நா. சபைப் பிரதிநிதி இன்று நியுயோர்க்கில் தெரிவித்தார். இஸ்ரேலியப் பிரதமர் திருமதி கோல்டா மெயர் அமெரிக்காவில் [illegible]

## விமானம் விழுந்து நொறுங்கியது

நியுயோர்க், செப். 9

அமெரிக்காவில் [illegible]

## பிரதமரின் வாழ்த்துச் செய்தி

## தொலைத்தொடர்பு அஞ்சல் நிலைய

## [illegible]

### தெமட்டகொடை கொலை:

# இரத்தினக்கல் வியாபாரிமீது பொலிஸ் வலைவீச்சு

கொழும்பு, வியாழன்

தெமட்டகொடையில் உள்ள 'மிஷன் ஹவுஸ்' ஒன்றில் அண்மையில் நடைபெற்ற என்ஜினியர் கொலை சம்பந்தமாக மேலும் புதிய தகவல்கள் பொலிசாருக்குக் கிடைத்துள்ளன. அதில் சம்பந்தப்பட்ட [illegible] பிடத்துக்கு வந்ததாகவும், திருமதி லீனு பெரேரா அணிந்திருந்த நகைகள் மீது அவர்கள் நாட்டம் கொண்ட வியாபாரிகளே இக்கொலையைச் செய்திருக்கலாமென்றும் கருதப்படுகிறது.

லீனு பெரேரா சிலதினங்க[illegible]

### கண்டக்டர்களுக்கு

## டட்லி சிபார்சு

கொழும்பு, புதன்

முன்னள் பிரதமரும், டெடிகமத் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினருமான [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சம் ரூபா பெறுமதியான உதிரிப்பாகங்கள் இ. போ. சபைக்கு தேவைப்

ணமென்று கூறப்பட்டது.

## விமானம் விழுந்து நொறுங்கியது

நியூயோர்க், செப். 9

அமெரிக்காவில் கென்னடி விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட விமானமொன்று மேலே கிளம்பிய சிலநிமிடங்களுக்குள் விழுந்து நொறுங்கியது. இந்த விமானத்திலிருந்த 11 அதிகாரிகளுமே கொல்லப்பட்டிருக்கவேண்டும் என்று அஞ்சப்படுகின்றது.

இஸ்ரேல் நாட்டின் ஐ. நா. சபைப் பிரதிநிதி இன்று நியூயோர்க்கில் தெரிவித்தார். இஸ்ரேலியப் பிரதமர் திருமதி கோல்டா மெயர் அமெரிக்காவில் இந்த இறுதிவாக்கில் வந்து ஜனாதிபதி நிக்ஸனுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்பே மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தையில் தொடர்ந்தும் இஸ்ரேல் பங்குபற்றுவதா இல்லையா என்பதுபற்றி முடிவுசெய்யப்படுமென்று தெரியவருகிறது.

## பிரதமரின் வாழ்த்துச் செய்தி

கோட்டை, புதன்

கொரியஜனநாயகக் குடியரசாகி 22 ஆண்டுகள் ஆகின்றன அதன் 22-வது ஜனநாயகக் குடியரசு தினத்தையொட்டிப் பிரதமர் சிறிமா கொரிய ஜனாதிபதிக்கு ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார்.

பல்கேரியா மக்கள் குடியரசுக்கும் அதன் குடியரசு தினத்தையொட்டிப் பிரதமர்வாழ்த்துச் செய்தியொன்றையனுப்பியுள்ளார்

......

## மேலும் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், வியா

மீசாலையில் மூதாட்டி படுகொலை செய்யப்பட்டதுசம்பந்தமாக நேற்று மற்றொரு சந்தேக நபர் பொலிஸ் வலையில் சிக்கினர். ஏற்கனவே நான்கு சந்தேக நபர்களை பொலிசார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளார்கள்.

சாவகச்சேரி பதில் இன்ஸ்பெக்டர் திரு. கந்தையா, மணியம் என்ற மற்றொரு சந்தேக நபரைக் கைது செய்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொலை செய்யப்பட்ட மூதாட்டி வீட்டில் சம்பவம் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் தங்கிச் சென்றுரென்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

(கு. வி. ம.

தொலைத்தொடர்பு அஞ்சல் நிலைய

# பதில் கிடைக்க 15 நிமிடங்கள்?

யாழ்ப்பாணம், வியா.

டெலிபோன் பாவனையாளர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள தொலைத் தொடர்பு அஞ்சல் நிலையத்துடன் தொடர்புகொள்ள வேண்டுமானுல் நம்பரைச் சுழட்டிய பின் டெலிபோன் றிசீவரை சுமார் 10 அல்லது 15 நிமிடங்கள் தூக்கிவைத்திருக்க வேண்டிய நிலை இருந்துவருகிறது. அதன்பின்னரே அங்கிருந்து மறுமொழி கிடைக்கிறதாம் இதற்குக் காரணம் டெலிபோன் இயக்குநர்கள் தட்டுப்பாடுஎன்று கூறப்படுகிறது.

காலை 7 மணியிலிருந்து 8 மணிவரை 3 இயக்குநர்கள் மட்டுமே இங்கு கடமையில் ஈடுபடுத்தபபட்டுள்ளனர் 8 மணிக்குப் பின்னர் வரும் அழைப்புக்களை விட, காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை வரும்அழைப்புக்களே கூடுதலாக இருப்பதாகவும், இதனுல் தங்களுக்கு வரும் அழைப்புக்களுக்கு உடனடியாக மறுமொழி தரமுடியாதிருப்பதாகவும் அவர்கள் கூறிக்கொள்கிருர்கள்.

8 மணிக்குப்பின்னர் தாராளமான இயக்குநர்கள் ஈடுபடுத்தப்படுவதாகவும், இவர்களிற் சிலரை 7-8 மணி கடமையில் ஈடுபடுத்துவதால் இவ்வித சிரமம் குறையும் என்றும் சிரமத்துக்குளாகிய பல டெலிபோன் பாவனையாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

## டட்லி சிபார்சு

கொழும்பு, புதன்

முன்னுள் பிரதமரும், டெடிகமத் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினருமான திரு. டட்லி சேனநாயக்கா இ. போ. ச. கண்டக்டர் நியமனத்துக்கு தமது தொகுதியிலிருந்து சிலரை சிபார்சு செய்துள்ளார்.

எம். பிக்களின் சிபார்சில் 1500 கண்டக்டர்கள் நியமிக்கப்படவிருப்பது தெரிந்ததே.

திருநெல்வேலியில்

# தீப்பெட்டித் தொழிற்சாலை நிறுவ முயற்சி

அம்பன், புதன்

திருநெல்வேலிப் பகுதியில் தீப்பெட்டித் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுவருவதாகத் திருநெல்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. ந. குமாரசாமி அறிவித்தார்.

திருநெல்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 26வது வருடாந்தப் பொதுக்கூட்டம் மேற்படி சங்கத் தலைவர் திரு. ந. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குச் சமுகமளித்த வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு. ஆர். சி. எஸ். குக் பேசுகையில், ''இப்பகுதியில் உள்ள நிலங்களில், வீடுகளைத் தேவைக்கு அதிகமாகக் கட்டி, நிலங்களை விரயஞ் செய்யாது கூட்டுறவு முறையில் நவீன முறைகளைக் கையாண்டு. பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவேண்டுமென்றும், இச்சங்கம் கல்கிண்டும் இயந்திரம் ஒன்றை வாங்கி இளைஞர்களைச் சேர்த்து, கல்லுள்ள தரிசு நிலங்களைப் பண்படுத்திக் கூட்டுப் பண்ணைகளை அமைத்தால் தொழில் வளமும், பொருளாதார வளமும் பெருகும்'' என்றும் குறிப்பிட்டார்.

மேற்படி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. ந. குமாரசாமி பேசுகையில், நமது சங்கம் தீப்பெட்டித் தொழிற்சாலை ஒன்றை விரைவில் நிறுவுவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்துவருகிறதென்றுகுறிப்பிட்டார்.

இச்சங்கம் தீப்பெட்டித் தொழிற்சாலை ஒன்றை நிறுவி நடாத்த, எடுத்துவரும் நடவடிக்கைகளை ஆதரிப்பதென்ற தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறியது. கூட்டுறவு வட்டாரப் பரிசோதகர் எஸ். சபாநாயகமும் உரை நிகழ்த்திஞர். காரியதரிசி திரு. சி. கார்த்திகேசு நன்றி கூறிஞர்.

உள்ள 'மிஷன் ஹவுஸ்' ஒன்றில் அண்மையில் நடைபெற்ற என்ஜினியர் கொலை சம்பந்தமாக மேலும் புதிய தகவல்கள் பொலிசாருக்குக் கிடைத்துள்ளன. அதில் சம்பந்தப்பட்ட சிலர் மீது பொலிசார் வலைவிரித்துள்ளனர்

இரத்தினபுரியிலிருந்தும், வேருவலையிலிருந்தும் இரத்தினக்கல் வியாபாரிகள் இருவர் சம்பவதினம் கொலை செய்யப்பட்ட என்ஜினியர் சேர்லி பெரேரா வின் இருப்

பிடமருகே வீரு பெரேரா அணிந்திருந்த நகைகள் மீது அவர்கள் நாட்டம் கொண்ட வியாபாரிகளே இக்கொலையைச் செய்திருக்கலாமென்றும் கருதப்படுகிறது.

வீரு பெரேரா சிலதினங்களுக்கு முன்னர் தமது உறவினர்களுக்கு அனுப்பிவைத்த கடிதமொன்றில் தம்மைச் சிலர் கொலைசெய்யவிருப்பதாகவும் எழுதியுள்ளாராம். கொலைக்குப் பாவிக்கப்பட்ட டாக்ஸி விரைவில் அகப்பட்டுவிடும் எனப்பொலிசார்தெரிவித்தனர்.

தெமட்டக்கொடை 'மிஷன் ஹவுஸ்' அறை ஒன்றில் ஒருவர் கொலைசெய்யப்பட்டுக்கிடந்ததும், அவரது மனைவி ஆபத்தான வெட்டுக் காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டதும் தெரிந்ததே.

## சரித்திரத்தில் முதலாவது இடைக்கால வரவு-செலவு திட்டம்

கொழும்பு, வியாழன்

நிதிஅமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா இன்று ஆட்சிமன்றத்தில் இடைக்கால வரவு-செலவுத்திட்டம் ஒன்றை சமர்ப்பிக்கவிருக்கிருர் இடைக்கால வரவு செலவுத்திட்ட அறிக்கை சமர்ப்பிப்பது இலங்கை அரசியலில் இதுவே முதல் தடவையாகும்.

சில அமைச்சுக்களுக்கும், திணைக்களங்களுக்கும் 79 கோடியே 24லட்சத்து 22 ஆயிரத்து 620ரூபா நிதிஒதுக்கும்படி நிதிஅமைச்சர்கோருகிருர்

## மூவர் மரணம்

கோட்டை, புதன்

இரு இளம் பெண்களும் வாலிபர் ஒருவரும் ரயிலால் நெரியுண்டு மரணமாகினர். யாழ்ப்பாணம் கொழும்பு ரயில் பாதையில், அனுராதபுரத்திலுள்ள பண்டார புளியம்குளம் என்ற இடத்தில் இச்சம்பவம் நடந்ததாக தெரிவிக்கப்பட்டது. எஸ். இராசம்மா(18 வயது), ஜே. தங்கம்மா(16 வயது), குழந்தைவேலு(22 வயது) ஆகிய மூவருமே ஒன்ருகத் தற்கொலை யுண்டவர்களாவர்.

வடபகுதி அசைஸ் விசாரணை

# 'கடைசித்தடவை என்ஞல் எழுந்திருக்க முடியவில்லை'

## பலாத்கார வழக்கில் பெண் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன்

எதிரி முழங்காலால் வயிற்றில் அடித்தார் பலதடவை விழப்பார்த்தேன் கடைசித் தடவை என்ஞல் எழுந்திருக்கமுடியவில்லை. அப்பொழுது எதிரி என்மீது பலாத்காரம் செய்தார்.

வவனியக பலாத்கார வழக்கில் சாட்சியமளித்த குசுமாவதி மேற்கண்டவாறு கூறிஞர்.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் வவனியாவில் 68-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ம் தேதி வவனியாவைச் சேர்ந்த பாவற்குளம் என்ற இடத்தில் குசுமாவதி என்ற பெண்ணை பலாத்காரம் செய்ததாக பி. சிறிசேன என்பவர்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் வி. ஜெகசோதி நியமிக்கப்பட்டிருந்தார்.

குசுமாவதி சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:- மூன்றுநாலு தடவை நான் விழுந்துவிட்டேன். எனக்குப்பயமாக இருந்தது எதிரியுடன் எனக்குதொடர்பிருக்கவில்லை. அவர் வீட்டிற்கு வருவதில்லை எதிரி போனபின் நான் கணவனிடம் சென்று சம்பவத்தைக் கூறினேன் கணவனுடன் பொலிசுக்கு சென்றேன்.

எதிரியின் வழக்கறிஞரால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது குசுமாவதி கூறியதாவது: எனது வீட்டிற்கு பக்கத்தில் அயலவர்கள் இருக்கின்ருர்கள். என் கணவனுக்கு 5 மணிக்கு சாப்பாடு கொண்டு சென்றேன். திரும்பிவரும்போது இருண்டுவிட்டது. நான் லாம்பு கொண்டு வரவில்லை.

இரவு 8 மணிக்கு படுக்கைக்குப் போனேன். அதிகாலை 3 மணிக்கு எழும்பினேன், நமலாதா என்னை எழுப்பிஞர். எதிரியின் உடைகளை அடையாளம் கண்டேன். அவர் சாரமும் பெனியனும் அணிந்திருந்தார்.

மேல்விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

# கையெழுத்து மோசடி வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், வியா

கையொப்ப மோசடி வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணமாஜிஸ்திரேட் திரு டயஸ் முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கடந்த தேர் லில் காங்கேசன்துறைத் தொகுதியில்போட்டியிட்ட அபேட்சகரான ஸி. சுந்தரலிங்கம் வழக்கு சம்பந்தப்பட்ட பத்திரங்களை சமர்ப்பித்து சாட்சியமளித்தார்.

இவ் வழக்கில் கடந்ததேர்தலுக்கான நியமனங்கள் தாக்கல் செய்யப்பட்ட தினம் நியமனப்பத்திரத்தில் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் கையெழுத்தை யிட்டதாக மூதவை உறுப்பினர் எஸ். நடராசா மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம்ஆஜராஞர். விசாரணையைப் பார்ப்பதற்காக கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமாஞேர் திரண்டிருந்தனர்.

நேற்றுக் கோர்ட்டிற்கு காங்கேசன்துறை எம். பி. திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் முன்னுள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு பீற்றஸ் பதில் மாவட்ட அதிபர் திரு ஜே. எம். சபாரத்தினம் ஆகியோர் வந்திருந்தனர்.

திரு ஸி. சுந்தரலிங்கம் சாட்சியமளித்த பின்னர் அவரை எதிரிசார்பில் ஆஜரான அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம் குறுக்கு விசாரணை செய்தார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

மன்ஞர்

# கொலை வழக்கில் எதிரிக்கு 1000 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், வியாழன்

மன்ஞர் கொலை வழககில் எதிரிக்கு 1000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதோடு, இறந்தவரின் பிள்ளைகளுக்கு 1000 ரூபா வழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் மன்ஞரில் 68ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ம் திகதி என். எம். ஹனியா என்பவர் எஸ். அலிமுகமட் என்பவரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி கைமோசக் கொலை குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

அபராத தொகையான 1000 ரூபாவை மாதம் 250 ரூபா வீதம் கட்டவேண்டுமென்றும், அபராத பணம் கட்டத் தவறிஞல் 6 மாத கடூழிய சிறைத்தண்டனை யென்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

## ஒருகைதி சுட்டுக்கொலை

### சிறைச்சாலையில்மோதல்

கோட்டை, புதன்

மகரசிறைச்சாலையில் கைதிகளுக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்குமிடையில் நேற்று ஏற்பட்ட கைகலப்பு மோசமாகாமல் தடுக்கும் பொருட்டு நடந்த துப்பாக்கிப்பிரயோகத்தில் கைதி ஒருவர் கொல்லப்பட்டார். வேறு சில கைதிகளும் சிறைச்சாலை அதிகாரிகள் சிலரும் பலத்த காயங்களுக்குள்ளாஞர்கள் இவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் நாடு

# 3 அமைச்சர்கள் ராஜிஞமா

சென்னை, செப். 9

தமிழ்நாடு அமைச்சர்கள் மூவர் இன்று ராஜிஞமாச் செய்துள்ளனர். அவர்களது ராஜிஞமாக்கடிதங்களைகவர்னர் ஏற்றுக்கொண்டார்.

நிதிஅமைச்சர் திரு மதியழகன், தொழிலாளர்நல அமைச்சர் திரு. வேழவேந்தன், ஊராட்சி அமைச்சர் திரு. முத்துச்சாமி ஆகியோரே ராஜிஞமாச் செய்தவர்களாவர்.

கட்சிப்பணிகளில் சில அமைச்சர்கள் ஈடுபடுத்தப்படவிருப்பதாகவும் மந்திரிசபை மிகவிரைவில் திருத்தி அமைக்கப்பட விருப்பதாகவும்தமிழ்நாடுமுதலமைச்சர் திரு மு கருணாநிதி அண்மையில் கூறியிருந்தார். அதற்கமையவே இந்த3 அமைச்சர்களும் ராஜிஞமாச்செய்துள்ளார்கள் எனத் தெரிகிறது.

### சட்டசபைக்கு எதிரான பிரேரணை நிராகரிப்பு

தமிழ்நாடு சட்டசபைக்கு எதிராக நிஜலிங்கப்பா தலைமையிலான காங்கிரஸ் கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சட்டசபையில் இன்று நிராகரிக்கப்பட்டது. பிரேரணையை எதிர்த்து 103 பேர் வாக்களித்தனர். 29 பேர் பிரேரணையை ஆதரித்தனர். 23 பேர் நடுநிலைமை வகித்தனர்.

சட்ட சபையில் அண்மையில் நடைபெற்ற உண்மையான அலுவல்களை வெளியிடாமல் அவற்றை திரித்து வெளியிட்டதாக 'நவசக்தி' என்ற பத்திரிகைக்கு எதிராகக் கொண்டுவந்த பிரேரணை உரிமைக் கமிட்டியின் விசாரணைக்கு விடப்பட்டது.

ஒரு மந்திரிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுக்களை பிரசுரித்த 'நவசக்தி' பத்திரிகை மந்திரி அளித்த பதில்களை பிரசுரஞ் செய்யாமல் விட்டுவிட்டதாக சட்டசபையில் புகார் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரியோவான் கல்லூரி
யாழ்ப்பாணம்:

## பிரவேச விண்ணப்பம்-1971

1. பின்வரும் வகுப்புக்களில் மாத்திரம் இடவசதியுண்டு.
   முதலாம் வகுப்பு (1-6 65—31-12-65)
   நாலாம் வகுப்பு (31-12-61)
   ஆறும் வகுப்பு (31,12-59)
   க. பொ. த. (சாதாரணம்)
   முதலாம் வருடம் (31-12-57)
   க. பொ. த. உயர்தரம்
   முதலாம் வருடம் (31-12-54)
2. அனுமதி கோரும் மாணவன் வகுப்புக்குரிய குறிப்பிட்ட திகதிக்குப் பின் பிறந்தவனாக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பப்பத்திரங்கள் 25-9-70 க்கு முன் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். கல்லூரிக் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொண்ட பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப்பத்திரத்துக்கு எழுதும்பொழுது முத்திரை ஒட்டிய காகித உறையில் உமது சரியான விலாசத்தையும் எழுதி அதனையும் சேர்த்து அனுப்பி வைக்கவும்.
4: பிரவேசப் பரீட்சைத் தினம் 13-10-70 வகுப்புக்கள் 4, 6, 9, 11)
5, பரீட்சையில் அதிக திறமையுடன் சித்தியெய்தும் மாணவர்களுக்குச் சலுகைகள் சில உண்டு.

கே. பூரணம்பிள்ளை
அதிபர்

பரியோவான் கல்லூரி,
5—9 - 70 2438



ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ்—ஜெயந்தி
நடித்த
இரு கோடுகள்



யாழ் - வின்சர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன்; ஜெய்சங்கர்,
ராஜஸ்ரீ; நிர்மலா
நடித்த
பூவா தலையா



2-வது வெற்றி வாரம்
ராஜா — யாழ்ப்பாணம்
(10-30, 2-30, 6-30, 9-45)
* துடிக்கும் இரத்தம் பேசட்டும்!
* துணிந்த நெஞ்சம் நிமிரட்டும்!!
* உழைக்கும் வர்க்கம் சேரட்டும்!!!
* உரிமை உடைமை காணட்டும்!!!
சோகத்தாய் சாரதாவின் உணர்ச்சி நடிப்பைக் காண வாரீர்.


# 'ஈழநாடு' கரபந்தாட்ட போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா 'ஈழநாடு' ஆதரவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான இரு கரபந்தாட்டக் கோஷ்டிகள் எதிர்பாராத விதமாக தோல்வியடைந்தன. யாழ் கரபந்தாட்டக் கழகமும் யாழ்ப்பாண றெக்ளமேஷன் சனசமூகக் கோஷ்டிகளுமே யாகும். இப் போட்டியில் வெற்றிபெற்ற கோஷ்டிகளின் விபரம் வருமாறு:

### கரபந்தாட்ட முடிவுகள்

சிவன் விளையாட்டுக் கழகம், ஸ்ரீவிநாயகர்கழகத்தை 2—1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

நீர்வேலி யுனைட்டட் 'பி' கழகம் சாவகச்சேரி வளர்மதிக் கழகத்தை 2—1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

வதிரி பொம்பஸ் கழகம் றெக்ளமேஷன் சனசமூக நிலயத்தை 2—1 ஆட்டத்தில்வெற்றிபெற்றது.

உடுப்பிட்டி நவஜீவனம் விளையாட்டுக்கழகம் கே. கே.கே. எஸ். யுனைட்டட்கழகத்தை 2—1 ஆட்டங்களால் தோற்கடித்தது.

கே. கே. எஸ். டெவலப்மன் போட் கோஷ்டி வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகத்தை 2—1 ஆட்டத்திஞல் வெற்றிபெற்றது.

ஊர்காவற்றுறைறேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் யாழ் கரபந்தாட்டக் கழகத்தை 2—1 ஆட்டத்திஞல்வெற்றி பெற்றது.

பருத்தித்துறை பொலிஸ் யுனைட்டட் கோஷ்டி, கரவெட்டி யூனியனையும், ஊர்காவற்றுறை றேஞ்சஸ் கழகத்தையும், இரு போட்டிகளில் 2—1 ஆட்டங்களால் தோற்கடித்தது.

இன்று பொலிஸ் கரபந்தாட்டத்திடலில் நடைபெறவிருக்கும் போட்டிகள்யாவும் யாழ், மத்திய கல்லூரியின் கரபந்தாட்டத்திடலிலேயே நடைபெறவிருக்கின்றன. காற்று வேகமாக வீசுவதிஞல் போட்டிகளை பொலிஸ் திடலில் நடாத்த முடியாமல் இருப்பதாக போட்டியின் அமைப்பாளர் திரு. ஈ. கே. குமரையா தெரிவித்தார், (தே. நி.)

## மெய்வல்லுனர் போட்டியில்

# ஹாட்லி வீரர் அன்பழகனின் சாதனை

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணம் கிழக்குப் பிரிவு மெய்வல்லுனர் சங்கத்திஞல் மேற்பிரிவு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட மெய்வல்லுனர்ப் போட்டி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் மிகவிமரிசையாக நடைபெற்றது.

இந்தப் போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், சாவகச்சேரிஇந்துக்கல்லூரி, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி ஆகியன கலந்துகொண்டன.

17 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் ஹாட்லிக் கல்லூரியின் மாணவஞன போல் அன்பழகன் தான் கலந்துகொண்ட மூன்று போட்டிகளிலும் புதிய சாதனைகளை ஏற்படுத்திஞர். ஒரு புதிய சாதனையும் 100 மீற்றர் ஓட்டத்தில் 12.5 விஞடிகளில் ஓடி ஒரு புதிய சாதனையும் 200 மீற்றர் ஓட்டத்தில் 25 7 விஞடிகளில் ஓடி ஒரு புதியசாதனையையும் ஏற்படுத்திஞர்.

போல் அன்பழகனின் இந்த மூன்று சாதனைகளும் விளையாட்டு உத்தியோகஸ்தர்களிஞல் உறுதிப்படுத்தப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. (தே. நி)

## டிராக்டர் போட்டியில் பரிசு பெறுவோர்

இம்மாதம் 30-ம் திகதி கிளிநொச்சி றெட்றிகோ பூங்காவில் யாழ் மாவட்ட விவசாய விழா நடைபெறவிருக்கிறது. ஆட்சிமன்ற விவகார, விளையாட்டு அமைச்சர் திரு. கே. பி. இரத்நாயக்கா, தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் திரு. செ. குமாரசூரியர், ஆகிய இருவரும் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்...

பரந்தனில் நடைபெற்ற நாலு சில்லு டிராக்டர் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு இவ்விழாவில் மேற்படி அ... வரும் ... குவர்.

### ஸ்பேஸ் வெற்றி

உடுப்பிட்டி, புதன் கரவெட்டி சுடரொளி விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடாத்தப்படும் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு மிடையே ஏற்பட்ட கரபந்தாட்டமோதலில்கரவெட்டி ஸ்பேஸ் 15:13, 1:15, 11:15 புள்ளிகளால் வதிரியை வென்றது. ஸ்பேஸ் ... சேர்ந்த திரு. ... திரு. கனகசுந்தரம் (பட்டினசபை ...

# வகுப்புவாதம் ஒழிவதற்கு சோஷலிஸ அமைப்புத்தேவை

## பொன். கந்தையா நினைவு கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், வியாழன் 'இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின்வளர்ச்சிக்கு அத்திபாரமிட்டது அமரர் கந்தையாவும், அவரது கொள்கைகளுமே. அவருடைய இலட்சியங்கள் என்றும் அழியாதன. அவருடைய சொல்லிலும், செயலிலும் எத்தகைய முரண்பாட்டையும் காண முடியாது. மார்க்ஸிய சித்தாந்தத்துக்கு ஒவ்வாத கருத்துக்களைச் சொல்ல யாரும் முற்பட்டால் அது பிழையெனக் கூறிச் சரியானது எது எனக் காட்டும் பெருமை வாய்ந்தவர் திரு பொன். கந்தையா, தமிழ் மக்கள் மத்தியில் அமரர் கந்தையாவும், திரு. வைத்திலிங்கமும் தலைசிறந்த கம்யூனிஸ்டுக்கள், சாதுரியம் வாய்ந்த மேதாவிகள்'.

மேற்கண்டவாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு எச் ஜீ. எஸ். இரத்தினவீரா நெல்லியடியில் நடைபெற்ற முன்னாள் பருத்தித்துறை எம். பியும், கம்யூனிஸ்ட் மேதையுமான அமரர் பொன். கந்தையா நினைவு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அட்வகேட் திரு எஸ். ஜெயசிங்கம் தலைமையில் இந் நினைவுவிழா நடைபெற்றது. திரு. இரத்தினவீரா மேலும் பேசுகையில் "இடதுசாரிகளிடையே ஒற்றுமையேற்பட வேண்டுமென்ற நெடுங்கால ஆசை இப்போதே பூர்த்தியடைந்துள்ளது. வகுப்புத் துவேஷத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கச் சோஷலிஸ சமுதாய அமைப்பு அவசியம். சம வாழ்வு வாழுகின்ருேம் என்ற சமத்துவ அமைப்பை இச் சமுதாய அமைப்பிலேயே பெற முடியும், இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ்-சிங்கள மக்களென்ற வித்தியாசமின்றி உழைப்பாளி மக்களை இணைக்க வேண்டுமென்பதே எமது நம்பிக்கை', என்று கூறிஞர்.

அவர் மேலும்தொடர்கையில்:

இன, மத, மொழிப்பிரச்னைகளை மையமாக வைத்து நாட்டில் தூண்டிவிடப்படும் வகுப்புவாதத்தை துரத்தியடிக்க எமது சோஷலிச அரசு தயங்காது. விலைவாசி குறையவும், வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவும், எமது அரசாங்கம் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறது. ...

### இனத்துவேஷம் ஏற்படக்காரணம்

'தனி மனித முன்னேற்றத்தை ஏற்படுத்தச் சமூக முன்னேற்றம் அவசியம். எமது இனம் உரிமைபெற நாடு பொருளாதாரத்துறையில் முழுமை பெற வளர வேண்டும். தேசத்தை எதிர்நோக்குகின்ற வேலையற்ருேர் பிரச்னை, சுகாதார வசதி, கல்வி வசதி, மின்சக்தி விநியோகம் போன்ற' அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளப் பலகோடி ரூபா வேண்டும். இத்தகைய பணத்தை எங்கிருந்து பெற வேண்டும். திறை சேரியில் பணமில்லையென்று சொல்லப் படுகிறது, அப்படியாஞல் பணத்தை எங்கிருந்து பெறுவது?.

இலங்கையில் இயங்கிவரும் அந்நியருக்குச் சொந்தமான வங்கிகளையும், தோட்டங்களையும், தனியார் இல்லங்களையும் அரசாங்கம் கட்டுப்படுத்தி வழி நடத்தி வந்தால் அரசாங்கம் தனக்குத் தேவையான பணத்தைப் பெறமுடியும் என்ருர்.

இனத்துவேஷம் ஏற்படுவதற்குப் பற்ருக்குறையும், பின்தங்கிய நிலையுமே காரணம். நாட்டில் பொருளாதார நிலை பெருகுமாஞல், அனைவரும் வாழ வழி பிறக்கும். இனத் துவேஷம், இல்லாத ஒரு கதையாகிவிடும். அனைவருக்கும் வேலை வாய்ப்பையும் இணைந்து வாழுல் இன்ப நிலையையும் ஏற்படுத்திவிடும்.

உடுப்பிட்டித் தொகுதிக் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பாளர் திரு பொன். குமாரசாமி பேசும்போது, 'தமிழ் மக்களிடையே இப்பொழுது புதிய வேகம் தோன்றியுள்ளது வியட்ஞமில் ஏழை விவசாயிகள் ஒன்று திரண்டு ஏகாதிபத்தியத்தை எதிர்க்கின்றனர். காடைத் தனங்களால் போராட்டத்தை அடக்க முடியாது. ஏழை மக்களின் அபிலாஷைகளையும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது என்ருர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

### கம்யூனிஸமே ஆட்சிபுரியும்

"அரசாங்கம் சமூகக்குறைபாடுகள்சம்பந்தமாக ஆராய்ந்துவருகிறது. மக்கள்மத்தியிலே நாட்டுப்பற்றும் தேசிய உணர்வும் ஏற்பட வேண்டும். எதிர்காலத்திலே இந்நாட்டில் கம்யூனிசமே ...

கொள்ளுமென்றும் சொன்ஞர்.

எம். ஸி. சுப்பிரமணியம் மேலும் பேசுகையில் அத்துளுகுள நீர்த்திட்டத்தை கொண்டு வந்தவர் பொன். கந்தையாவே என்று குறிப்பிட்டு சிறுபான்மைமக்களுக்கு திரு பொன் கந்தையா அரிய சேவையாற்றிஞர் என்ருர்,

திரு டொமினிக் ஜீவா, திரு அ வைத்திலிங்கம், திரு தெட்சணமூர்த்தி ஐயர் ஆகியோருட்பட வேறுபலர் பேசினர். வியட்ஞம் யுத்தக் கொடுமைகள், சோவியத் விஞ்ஞானம் போன்ற இலவச படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

(உடுப். நெல் புலோலி நிருபர்கள்)

## பஸநாயக்கா நியமனம்

கோட்டை, புதன் ஜப்பானில் இலங்கையின் தூதராக திரு ஏ. பஸநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

45 வயதான திரு. பஸநாயக்கா தற்போது பாதுகாப்பு வெளிநாட்டு விவகார அமைச்சில் வெளிநாட்டுத் தொடர்பதிகாரியாகக் கடமையாற்றுகிருர் ரோம், றங்கூன், வாஷிங்டன், நியூயோர்க் புதுடில்லி ஆகிய இடங்களிலும் இவர் கடமையாற்றியுள்ளார்.


வியாபாரம்பெருக விளம்பரம் செய்க



காணவில்லை



யோசேப்பு என்னும் வாலிபன் 8-8-70 திகதி தொடக்கம் காணவில்லை. இவரை என்னிடம் அல்லது கிட்டிய ...


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

* துணிந்த நெஞ்சம் நிமிரட்டும்!!
* உழைக்கும் வர்க்கம் சேரட்டும்!!!
* உரிமை உடமை காணட்டும்!!!

சோகத்தாய் சாரதாவின் உணர்ச்சி நடிப்பைக் காண வாரீர்.

செம்மீன் ஷீலா, சாரதா, மது, பிரேம்நசீர், திக்குரிச்சி மற்றும் பலர் நடித்த

இந்திய ஜனாதிபதியின் ஊர்வசி பரிசுபெற்ற

# துலாபாரம்

(மலையாளம்)

(எஸ். ரீ. ஆர். பிலிம்ஸ்)



இன்று மட்டும்

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

(பிரிப்போயா, போயா காலை 10-30)



★ ஏ. வி. எம். ராஜன்
★ சௌகார் ஜானகி
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்

மற்றும் பலர் நடித்த

# துணைவன்



நாளை முதல்

இந்திய ஜனாதிபதியின் ஊர்வசி பரிசு பெற்ற

சாரதா நடிக்கும்

# துலாபாரம்

(தமிழ்)


நடைபெற்ற போட்டிகளில் ஹாட்லிக் கல்லூரியின் மாணவனுன போல் அன்பமுகன் தான் கலந்துகொண்ட மூன்று போட்டிகளிலும் புதிய சாதனைகளை ஏற்படுத்தினர்.

இவர் நீளம் பாய்தல் போட்டியில் 18 அடி 8 3/4 அங்குல தூரத்தை தாண்டி

## துள்ளுமீன் விளையாட்டுக் கழகம்

உடுப்பிட்டி, புதன்

பருத்தித்துறை துள்ளுமீன் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டுவிழா எதிர்வரும் 20ம், 21ம், 22ம் திகதிகளில் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

## யாருடையது?

முட்டாஸ்கடைசந்திக்கு அருகாமையில் மணிபேர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு வல்வெட்டியைச் சேர்ந்த எஸ். பாலசிங்கம் என்பவரால் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சியுடன்காரியாலயநேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிப்போயா 2-30
ஜெய் சங்கர் - கே. ஆர். விஜயா நடித்த
**பஞ்சவர்ணக்கிளி**

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
ஜெமினி-சாவித்திரி நடித்த
**கற்புக்கரசி**

**MANOHARA**
Jaffna
Daily 4-45, 7 & 9-45p m.
Lloyd Bridges,
Joan Blackman
in
DARING GAME
[Color]

REGAL
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m.
Kirk Douglas,
James Mason
in
20,000 LEAGUES
UNDER THE SEA


பரந்தனில் நடைபெற்ற நாலு சில்லு டிராக்டர் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு இவ்விழாவில் மேற்படி அமைச்சர்கள் இருவரும் [பரி]சில்களை வழங்குவர்.

பரந்தனில் நடைபெற்ற 4 சில்லு டிராக்டர் போட்டியில் பரிசுபெற்றவர்கள் விபரம்:-

(1) திரு. ஏ. பரமநாயகம், வவுனியா. (2) திரு. என். தியாகராசா (கிளிநொச்சி) (3) திரு. என். பசுபதிப்பிள்ளை, (அக்கராயன்) (4) திரு. பி. இரத்தினம் (கண்டாவளை), (5) திரு. எஸ். முத்துராசா (சுன்னாகம்). (6) திரு. சி. தனபதி (துணுக்காய்).

இரண்டு சில்லு டிராக்டர் போட்டியில் பரிசுபெற்றவர்கள் விபரம்:-

(1) திரு கே கதிரவேல் நாதர் (பரந்தன்). (2) செல்வி ஆ. இராஜகுமாரி (மிருசுவில்). (3) திரு. ஏ. கே. சோமபால (பரந்தன்). (4) செல்வி ரி. கனகேஸ்வரி, (மிருசுவில்). (5) செல்வி ஜே. சாந்தாதேவி (மிருசுவில்). (6) திரு. பி. ஆர். குலநாயகம் (கிளிநொச்சி)

யாழ் மாவட்ட விவசாய விரிவாக்க அதிபர் திரு. பொ. மாணிக்கவாசகரால் நடாத்தப்பட்ட உழவு யந்திரப் போட்டியில் 53 நாலு சில்லு டிராக்டர்களும் 15 இரண்டு சில்லு நடைஉழவு யந்திரங்களும்பங்குபற்றின. 'டேவிட் பிரவுண்' 'யன்மா' உழவு யந்திர சொந்தக்காரர்கள் இப்போட்டியில் முதலிடத்தை பெற்றுள்ளார்கள். தென்மராட்சி விசயாய போதனாசிரியரின் வட்டாரத்திலுள்ள மிருசுவில் படித்த மகளிர் குடியேற்ற திட்டத்தை சேர்ந்த மூவர் இப்போட்டியில் வெற்றிபெற்றுள்ளனர்.

இப்போட்டிகளில் முதல் பரிசு பெற்ற இருவர்களுக்குக் தங்கப்பதக்கம் வழங்கப்படும். (கு வி ம)

## மெய்வல்லுநர் போட்டி

நெல்லியடி, புதன்

வல்வெட்டித்துறை சன சமூக நிலையத்தின் ஆம்ஸ்ரோங்' கழகத்தின் மெய்வல்லுநர் போட்டி அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக உடுப்பிட்டி ஆட்சி மன்ற உறுப்பினர் கலந்து கொண்டார்.

பார்வையாளர்களுக்கான ஒருமைல் ஓட்டம் விநோத உடைப் போட்டி என்பனவும் விழாவில் இடம்பெற்றன.

தாட்டமோதலில்கரவெட்டி ஸ்பேஸ் 15:13, 1:15, 11:15 புள்ளிகளாஸ் வதிரியை வென்றது. ஸ்பேஸ் கோஷ்டியைச் சேர்ந்த திரு. அப்புக்குட்டி, திரு. கனகசுந்தரம் (பட்டினசபை உறுப்பினர்), இந்திரன் ஆகியோர் திறமையாக விளையாடினர்.

இப்போட்டிக்குத் திரு எஸ். நடேசன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இதே சுற்றுப் போட்டியில் கோவில் சந்தை ''விப்'' கோஷ்டியும், வதிரி பொமேர்ஸ் ''பி'' பிரிவுக்கோஷ்டியும் மோதிக் கொண்டதில் 2—1 ஆட்டங்களால் கோவிற்சந்தை 'விப்' வென்றது மத்தியஸ்தராகத் திரு. நடேசு கடமையாற்றினர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியா. 10—9—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திரகானம் 1-00 மாதர் கேட்டவை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள்.

இரவு 6-15 பாமாலை, 7-00 திரைகானம், 7-15 புல்லாங்குழல், 7-45 பேச்சு 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு.

## வீட்டுக்குத் தீ

மட்டுவில், புதன்.

நுணுவில் மேற்கில் திடீரென ஏற்பட்ட ஒரு தீ விபத்தின் காரணமாக கதிரித்தம்பி சங்கரமூர்த்தி என்பவரின் வீடு எரிந்து சாம்பரானது. இதைத் தொடர்ந்து சாவகச்சேரிப் பொலிசார் தீவிரபுலன் விசாரணை நடத்தி வருகிறார்கள். இது விஷமிகளின் செயலாகஇருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

நாட்டில் தூண்டிவிடப்படும் வகுப்புவாதத்தை துரத்தியடிக்க எமது சோஷலிச அரசு தயங்காது. விலைவாசி குறையவும், வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவும்; எமது அரசாங்கம் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறது. நாட்டின் நிதிநிலைமைமோசமாகவிருந்த போதிலும்நாம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம் எனவும் குறிப்பிட்டார்.

வட பிரதேச கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு வி. பொன்னம்பலம்பேசுகையில்

**கம்யூனிஸமே ஆட்சிபுரியும்**

'அரசாங்கம் சமூகக்குறைபாடுகள்சம்பந்தமாகஆராய்ந்துவருகிறது. மக்கள்மத்தியிலே நாட்டுப்பற்றும் தேசிய உணர்வும் ஏற்படவேண்டும். எதிர்காலத்திலே இந்தநாட்டில் கம்யூனிசமே நிச்சயம் ஆட்சிபுரியும்.

நியமன எம். பி. திரு எம். ஸி. சுப்பிரமணியம் பேசுகையில் ஸ்ரீமா தலைமையிலான அரசாங்கம் துணிச்சலான அரசாங்கமென்றும், பல முன்னேற்றத் திட்டங்களைத் துணிச்சலுடன் மேற்




யோசேப்பு என்னும் வாலிபன் 8-8-70 திகதி தொடக்கம் காணவில்லை. இவரை என்னிடம் அல்லது கிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கவும். அவர்களுக்கு ரூபாய் 100 சன்மானம் வழங்கப்படும்.

ஆ. திருசிற்றம்பலம்,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

2425



தமிழ், ஆங்கில மொழிகளில்

# அச்சு வேலை எதுவானாலும்

எங்களையும் விசாரியுங்கள்

எமது வர்த்தக அச்சகப் பகுதியில்

★ கடிதத் தொடர்புகள்
★ அறிமுக அட்டைகள்
★ பெரிய சிறிய பிரசுரங்கள் — பிரசுரித்தல்
★ புத்தகம் கட்டுதல்
★ புதியவகைப்பற்றுச்சீட்டுப்புத்தகங்கள்
★ பெரிய பதிவுப் புத்தகம்
★ கோடடித்தல்

ஆதியன.

குறைந்த கட்டணத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்த ஊழியர்கள் திருப்தியான வேலை செய்கிறார்கள்.

சிறந்த சேவையே எமது நோக்கம்

**ஈழநாடு (வர்த்தக அச்சகப் பகுதி)**

தொலைபேசி: 389   த. பெ. எண்: 49,

55, சிவன்கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 மணி நேரத்தில் நிபந்தனை நிறைவேறு விட்டால்

# பிரயாணிகளுடன் விமானத்தை வெடி வைத்து தகர்ப்போம்

## கொமாண்டோக்கள் விடுத்துள்ள இறுதி எச்சரிக்கை

அம்மான், செப்.9

**ஐரோப்பிய நாடுகளில் சிறைவைக்கப்பட்டுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்களை இன்னும் 24 மணி நேரத்துக்குள் விடுதலை செய்யவேண்டும். இல்லையென்றால் கடத்திச் செல்லப்பட்ட விமானத்தை அதிலுள்ள பிரயாணிகளுடன் வெடிவைத்துத் தகர்த்துவிடுவோம் என்று பாலஸ்தீன அரபுக் கொமாண்டோக்கள் இன்று அறிவித்துள்ளனர்.**

ஜோர்டானுக்குள் இவர்கள் கடத்திச்சென்று பாலைவனமொன்றில் வைத்துள்ள விமானத்தில் இன்னும் 180 பிரயாணிகள் இருக்கின்றனர். இஸ்ரேல் மேற்கு ஜெர்மனி சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த யூதர்களான பிரயாணிகளே இதில் அதிகமானவர்கள் என்று தெரிகின்றது.

சுமார் 120 பேரை ஏற்கனவே கொமாண்டோக்கள் விடுவித்திருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள்பெண்களும்குழந்தைகளும், வயது முதிர்ந்தவர்களுமாவர்.

இவர்களுடனிருந்த 16 இந்தியர்களும் அம்மானில் ஓட்டல் ஒன்றில் பத்திரமாக இருக்கின்றனர்.

கொமாண்டோக்களின் நிபந்தனைகளுக்கு ஏற்கனவே மேற்குஜெர்மனியும் சுவிட்சர்லாந்தும் இணங்கி விட்டன. லண்டனில் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள கொமாண்டோ இளம் பெண்ணை விடுதலை செய்வதுபற்றி பிரிட்டிஷ் மந்திரிசபை இன்னும்முடிவு எதுவும் எடுக்கவில்லை.

இதுவிடயமாக வேண்டிய ஒழுங்கு நடவடிக்கைகளைச் செய்வதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த விசேட குழுவொன்று ஜோர்டான் தலைநகரான அம்மான் போய்ச் சேர்ந்துள்ளது.

பாலஸ்தீன அரபுக் கொமாண்டோக்கள் ஜோர்டானில் வைக்கப்பட்டிருக்கும் விமானத்தையும் பிரயாணிகளையும் திருப்பிக் கொடுப்பதற்குரிய காலக்கெடுவை மேலும் ஆறுமணி நேரம் தள்ளிப் போட்டுள்ளனர்.

சுவிற்சர்லாந்தில் சிறையில் இருக்கும் மூன்று அரபுக் கொமாண்டோக்களை விடுதலை செய்யாவிட்டால் இரண்டு விமானங்களையும் தகர்க்கப் போவதாக கொமாண்டோக்கள் இறுதி எச்சரிக்கை செய்துள்ளனர்.

அம்மானில் வைக்கப்பட்டிருக்கும் இவ் விமானங்கள் இரண்டையும் ஜோர்டானிய இராணுவமும்கவச மோட்டார்களும் பாதுகாத்து வருகின்றன. இவ் விமானங்களில் பிரயாணஞ் செய்த 180 பிரயாணிகளில் பெண்கள் குழந்தைகள் ஆகியோர் உள்ளனர். இந்தவிமானத்தில் சென்ற 16 இந்தியர்கள் அம்மானில் பத்திரமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

### யுதாண்ட் கண்டனம்

இவ்வித விமானக்கடத்தல் காட்டுமிராண்டித் தனமான மனிதத் தன்மையற்ற செயல் இவ்வித செயலுக்கு எதிராக சர்வதேச சமுதாயம் பாதுகாப்பு எடுத்துக் கொள்ள வேண்டுமென ஐ; நா. சபையின் பொதுக் காரியதரிசி யுதாண்ட் கூறியிருப்பதோடு இச்செயலை அவர் கடுமையாகக் கண்டித்தார்.

எகிப்திலிருந்து வெளியாகும் செல்வாக்குள்ள பத்திரிகை ஒன்று இவ் விமானக் கடத்தலை கண்டித்துள்ளது எகிப்திய அரசாங்க சார்பான அல்அஹ்ராம் பத்திரிகையும் ஏற்கனவே இச்செயலைக்கண்டித்துள்ளது.

அரசியல் பொருளாதார புரட்சிக்கு

## நடுநிலை நாடுகளின்

அரசாங்க அலுவலகங்களில்

## சோஷலிஸப் போர்வையில் இனத்துவேஷக்காரர்கள்

### அஞ்சல் எழுது வினைஞர் கூட்டத்தில் எச்சரிக்கை

வெள்ளவத்தை, புதன்

"உலகத்தில் இதர சோஷலிச நாடுகளில் சிறுபான்மை இனத்திற்கு எவ்வித இடர்பாடுகளும் இல்லை. தேசிய முன்னேற்றத்திற்காக உண்மையிலேயே சிறுபான்மையினருக்குக் கூடிய சலுகைகள் வழங்கியிருக்கிறார்கள். இங்கும் அதே முறையைப் பின்பற்றி எமக்குள் எவ்வித பாகுபாடுமற்ற ஓர் அரசியல் முறையைக் கடைப்பிடிப்பதானால் எல்லோரும் அதை விரும்புவார்கள். நாமும் அதற்கு நேசக்கரம் நீட்டுவோம். ஆனால் அரசாங்கம் அப்படியான எண்ணத்தில் இருந்தாலும்கூட சோஷலிசவாதிகள் என்ற போர்வையில் சில சந்தர்ப்பவாதிகள் அரசாங்க அலுவலகங்களில் இனத்துவேஷத்தைப் பரப்பி நிலைமையைச் சீரழிக்கப்பார்க்கிறார்கள். அரசியலாரின் ஆதரவு தமக்கு உண்டென்ற மமதையில் தமது விருப்பு வெறுப்புகளை, பல நிர்ப்பந்தங்களைத் தமிழ்ப் பேசும் அரசாங்க ஊழியர்கள்மீது திணிக்க எத்தனிக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பவாதிகள் மீது அரசியலார் மிகக் கவனமாக இருக்கவேண்டும் என்று எச்சரிக்க விரும்புகின்றோம்"

இவ்வாறு அஞ்சல் எழுது வினைஞர் சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய சங்கத்தின் புதிய தலைவர் திரு. இ அந்தோனிப்பிள்ளை கூறினார்.

திரு. அந்தோனிப்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"ஒவ்வொரு அரசாங்க [illegible] அரசாங்க சேவையில் புத்திஜீவிகளான அரசாங்க ஊழியர்கள் நாட்டை ஒரு புரட்சிப் பாதையில் இட்டுச் செல்வார்கள்.

கொள்ளுப்பிட்டி தேயிலைப் பிரச்சாரச் சபை மண்டபத்தில் நடைபெற்ற இத் தொழிற்சங்கக் கூட்டத்தில் ஒன்று முதல் பதினைந்து தீர்மானங்கள்வரை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன: கிழமையில் 5 நாள் வேலைத் திட்டம், சிறுபான்மையினர் பாதுகாப்புச் ஷரத்து புதிய அரசியல் திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும், வெள்ளிக் கிழமையில் சைவ சமயத்தவர்களுக்கு வழிபாட்டு லீவு வேண்டும். பொதுச்சேவையில் பத்து வருடம் கடமையாற்றியவர்களுக்கு இரண்டாந்தரப் பதவி உயர்வு வேண்டும்: வாழ்க்கைச்செலவைக்கவேண்டும். வெளிநாட்டுத் தரமான சஞ்சிகைகள் இறக்குமதிக்குத் தடைவிதிக்கக்கூடாது என்பன போன்ற பல முக்கிய தீர்மானங்கள் பிரேரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

இத்தீர்மானங்களின் பிரதிகள் பிரதம மந்திரிக்கும், தொழிற்சங்கங்களின் பதிவாளருக்கும் அனுப்பிவைக்கப்படும்.

சங்கத்தின் நடப்பு வருட அலுவலர்களும் இப்பொதுக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## வினோபா உடல் நிலை

பம்பாய், செப். 9

சர்வோதய பூமிதான இயக்கத் தலைவர் விநோபா பாவே கடும் சுகயீனமுற்றுள்ளார். அவருக்கு நேற்றுக் காலை 101 பாரன் ஹீட் சென்டிக்கிரேட்டில் காய்ச்சல் இருந்தது. இவரைப் பரிசோதித்த டாக்டர்கள் மருந்து சாப்பிட்டு ஓய்வெடுக்குமாறு கூறியுள்ளனர். அவர் உயிருக்கு எவ்வித ஆபத்துமில்லை என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## 'ஸாகித்தியங்கள் விளங்கவேண்டும்'

தாவடி, செவ்வாய்

"பாடகர்கள் இராகத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் அதேவேளை, ஸாகித்யங்கள் விளங்கும் வகையில் பாடுதல் வேண்டும். இதனால் ரசிகர்கள் யாபேரும் இலேசான முறையில் கருத்தையும் உணர்ந்து ரசிக்கக் கூடியதாக விருக்கும் யாழ்ப்பாணத்திலே தமிழ் இசைப் பாடல்களுக்கு முக்கியஇடம் அளித்து -இசை பரப்பிப் பணி செய்து வருவது அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்"

இவ்வாறு. அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற நான்காம் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்து உரையாற்றிய இறைவரி மதிப்பாளர் திரு. க. தனபாலசிங்கம் கூறினார்:

இசைக் கலைஞர்களை நாம் போற்றுவதுடன் அவர்களுக்கு ஊக்கமும் ஊதியமும் அளிக்கும் வகையில், பிள்ளைகளுக்கு இசைபயிற்றுவிக்க பெற்றோர்கள்முன்வரவேண்டும் என்றும் கூறினார்.

## 'தரமற்ற ஈழப்பத்திரிகைகளை முதல்தடைசெய்யவேண்டும்'

சுழிபுரம், [illegible]ன்

## தமிழ் மொழி மூலமே தமிழை வளர்க்கவேண்டுமாம்

உடும்பராய், புதன்

"தமிழ் மொழி வளர்ச்சியின் பொருட்டு உலகத் தமிழ் மகாநாடுகள் நடைபெறுகின்றன. சமீபத்தில் பாரிசில் நடைபெற்ற உலகத்தமிழ்மகாநாடு தமிழ் மொழியில் நடைபெறாமல் வேற்றுமொழிகளில் நடைபெற்றதாக அறியும்போது வருந்த வேண்டியுள்ளது. உலகத்தமிழ் மகாநாட்டை தமிழ்மொழியிலேயே நடத்துவதினால் மட்டுமே தமிழை வளர்க்கமுடியும்".

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் சேவையிற் பயிற்சி வகுப்பினை ஆரம்பித்துவைத்துப் பேசிய கோப்பாய் வட்டாரக் கல்விஅதிகாரி திரு. வே. சண்முகநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: நமது அரசாங்கம் தமிழ் மொழியை வளர்க்கும் நோக்கமாகக் கனிஷ்ட பொதுத்தராதரப் பத்திர வகுப்புக்களில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சேவையிற் பயிற்சி வகுப்புக்களை நடாத்த முன் வந்திருப்பது மிகவும் வரவேற்கக் கூடியதே. இப் பயிற்சிவகுப்புக்களினால் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்கள் மட்டுமன்றி சம்பந்தப்பட்ட ஆசிரியர்களும் பெரும் பயன் அடைகிறார்கள். கோப்பாய் வட்டாரத்துக்கான கனிட்ட பொதுத் தராதரப்பத்திர வகுப்புக்களால் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவையிற் பயிற்சிவகுப்பினை ஆரம்பித்துவைப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு எஸ் முத்துலிங்கம், திரு அ பஞ்சாட்சரம் ஆகியோர் போதனாசிரியர்களாகக் கலந்துகொள்ளும் இப் பயிற்சியின் தொடர் வகுப்புக்கள் எதிர்வரும் ஞாயிறு திங்கள் இரு நாட்களும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் தொடர்ந்தும் நடைபெற இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## இடமாற்றச் சபையில் அ. இ. த. ஆ. சங்கத்துக்கு இடமளிக்கப்படாததேன்?

உடும்பராய் புதன்

"ஆசிரியர் ஆலோசனைச் சம்மேளனத்தில் உள்ள முக்கிய ஆசிரியர் சங்கங்கள் ஆறுகும் ஆசிரியர் ஆலோசனைச்சம்மேளனத்தில்மத்திய இடமாற்றச் சபைக்கென ஐந்து சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைத் தெரிந்துவிட்டு அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்துக்கு மட்டும்அப்படியான தொரு சந்தர்ப்பம் வழங்காமை மிகவும் கவலை தருவதாகும் இலங்கையில் மிகவும் கூடிய தமிழாசிரியர்களை அங்கத்தவர்களாகக் கொண்டதும் அகில இலங்கை ஆசிரியர் சம்மேளனத்தில் ஆரம்ப காலந்தொட்டே அங்கம் வகித்து வருவதுமான அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்துக்குமத்தியஇடமாற்றச்சபையில் பிரதிநிதித்துவம் வழங்காமல்விட்டமை குறித்த சங்க அங்கத்தவர்களைப் புறக்கணிப்பதாயுள்ளது. இந்த நீதியீனத்தை ஆசிரியர் ஆலோசனைச் சம்மேளனத்துக்கும், கல்விப் பகுதிக்கும் தெரிவிக்க வேண்டியது எமது முக்கிய கடனாகும்."

சென்ற செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் ஆசிரியர் சங்கக் கந்தோரில் நடைபெற்றவட இலங்கைத் தமிழாசிரியர் சங்க நிர்வாகிகளின் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு செய்யப்பட்டது.

தமது பிரதிநிதிகளது முக்கிய இடமாற்றப்பிரச்சினை சம்பந்தப்பட்ட விஷயங்களை எடுத்துப் பேசி நீதிகிடைக்கச் செய்ய வேண்டியது அகில இலங்கைத்தமிழாசிரியர் சங்கத்தின் கடனாகும். மத்திய இடமாற்றச் சபையில் அங்கம் வகிக்கும் உரிமையை அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்துக்கு வழங்காத சந்தர்ப்பத்தில் ஆலோசனைச் சம்மேளனத் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதில் காணக்கூடிய பலன் தான் என்னவென்று பலரும்சுட்டிக்காட்டிப் போசினார்கள்,

சங்க உபதலைவர் திரு. த. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சங்க வளர்ச்சிபற்றிய முக்கிய விஷயங்களைபல ஆராயப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பொருளாதார புரட்சிக்கு

# நடுநிலை நாடுகளின் ஒத்துழைப்புக்கு அறைகூவல்

## லுசாக்கா மாநாட்டில் இந்திரா நிகழ்த்திய உரை

லுசாக்கா, செப். 9

''அரசியல் பொருளாதார விடுதலைக்கான புரட்சியைக் கொண்டு செலுத்துவதில் நடுநிலைமை நாடுகள் ஒன்றுக்கொன்று வலுவான ஒத்துழைப்பை அளிக்கவேண்டும். இன்று உலகில் அதிக பிரச்னைக்குரியதாக இருக்கும் மேற்காசிய தென் கிழக்காசிய பிரச்னைகளை அமைதிவழியில் தீர்த்து வைக்கவேண்டும். இந்த அமைதிகாண வேண்டுமென்ற ஆவல் நம்மிடையே இன்றும் இருந்துகொண்டுதான் இருக்கின்றது''

இவ்வாறு நேற்று சாம்பியா நாட்டின் தலைநகரான லுசாக்காவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாட்டில் உரை நிகழ்த்திய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அரசியல் பொருளாதார விடுதலைக்கான எமது போராட்டமும் உலகில் அமைதிகாண நடக்கும் போராட்டமும் இன்னும் ஓய்ந்துவிடவில்லை. உலக அமைதியைப் பேணுவதில் நடுநிலைமை நாடுகள் தொடர்ந்து போராடவேண்டும் என்று கூறினார்.

இம்மகாநாட்டில் எதியோப்பிய மன்னர் ஹைலி சலாஸி, போத்துக்கல், தென்ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெறும் இன ஒதுக்கல் கொள்கையைக் குறிப்பிட்டுப்பேசினார். இந்நாடுகள் தங்கள் கொள்கைகளிலிருந்து மாறுதவரையில், அந்நாடுகளின் சரக்குக் கப்பல்களுக்கு ஆசிய நாடுகள் துறைமுக உரிமையை மறுக்கவேண்டும் என அவர் நடுநிலைமை நாடுகளைக்கேட்டுக்கொண்டார்.

நேற்றைய உச்சிமகாநாட்டில் சாம்பியா நாட்டின் ஜனாதிபதி கவுண்டர் தலைவராகவும், இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஆகியோர் உட்பட ஆறுநாடுகளின் பிரதிநிதிகள் உபதலைவர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

தென்வியட்னாமின் புரட்சி அரசுக்குப் பார்வையாளர் அந்தஸ்து கொடுக்கப்பட்டது. இந்தியாவின் இவ்யோசனைக்கு மகாநாடு ஆதரவு தெரிவித்து ஏற்றுக்கொண்டது.

### ''உபந்நியாசங்கள் நடைபெறவேண்டும்''

யாழ்ப்பாணம், புதன்

'சமய அறிவை வளர்க்கும் இடமாக ஆலயங்கள் திகழவேண்டும். கருத்து நிறைந்த உபந்நியாசங்கள் ஆலயங்கள் தோறும் நடைபெறவேண்டும்'

என்றிவ்வாறு சாந்தையர் மடம் கற்பகவிநாயகர் கோவிலில் நடைபெற்றுவரும் அலங்கார உற்சவத்தின் மூன்றும்நாள் விழாவில் வரவேற்புரை நிகழ்த்திய வ. கந்தசாமி கூறினார்.



நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவ நிகழ்ச்சிகளை வண்ணத்திரை ஓவியமாகத் தயாரிக்கும் அமெரிக்கப் பெண்ணை செல்வி இவோன் ஹனிமன் இங்கு மத்தியில் காணப்படுகிறார். அவருக்கு வலதுபுறம் காணப்படுபவர் இலங்கை திரைப்படப் பிடிப்பாளர் திரு. டில்மன் ஜயரட்ன.

### துணை ஆயர் விஜயம்

உடுப்பிட்டி, புதன்

திருமலை-மட்டுநகர் உதவி மேற்றிராணியார் கலநிதி வண. பீ. தியோகுப்பிள்ளை அடிகளார் நேற்று முன்தினம் கரவெட்டிக்கு விஜயம் செய்தார். அவர் வதுரி புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று புதிதாகத் திருத்த வேலைகள் செய்யப்பட்ட தேவாலய வடிவமைப்பையும், மின்சார தீப அமைப்புகளையும் பார்வையிட்டார்.

வதிரி இருதயக் கல்லூரி அதிபர் திரு. தோமஸ் ஈப்பென், புத்தகசாலை அதிபர் திரு. லுக்கேஸ்பிள்ளை ஆகியோர் துணை ஆயரை வரவேற்றனர். கரவைக் கத்தோலிக்க வாலிபர் கழகத்தினர் ஆசிரியர் திரு. இராசு மரியாம்பிள்ளை தலைமையில்சென்று ஆசீர்வாதம் பெற்றனர். துணை ஆயர் கரவெட்டி கன்னியர் மடத்திற்கும் சென்று கன்னியாஸ்திரிகளுடன் உரையாடினார்.

அவர் பருத்தித்துறையிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களுக்கும் விஜயம் செய்தார் துணைஆயர் முன்னர் கரவெட்டி, பருத்தித்துறைப் பங்குகளின் சுட்டலைக்குரவாராக இருந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

...த்திய சங்கத்தின் புதிய தலைவர் திரு. இ. அந்தோனிப்பிள்ளை கூறினார்.

திரு. அந்தோனிப்பிள்ளை தொடர்ந்து பேசியதாவது:

''ஒவ்வொரு அரசாங்க ... அரசாங்க சேவையில் ஒரு புது மாற்றத்தை ஏற்படுத்தவேண்டுமென முனைகிறது. ஆனால் அடிப்படையான மாற்றம் எதுவும் ஏற்படாததினால் அரசாங்க சேவை பழைய நிலையிலேயே இருக்கிறது. அரசாங்க சேவையை நாட்டின் பொருளாதார சமூக மாற்றங்களுக்கமையத் திருத்தி அமைக்காவிட்டால் நாடு முன்னேறாது. அரசாங்க சேவை, மக்களுடைய சேவையாகக் கருதக்கூடிய அளவுக்குப் பல மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும்.

அரசாங்க ஊழியருக்கு அரசியல்உரிமைகள் அளித்த பின்பு ஒரு புதுச் சமுதாயம் இந்த நாட்டிலே உருவாகும் ஏனெனில் பொதுமக்களைப் போன்று அரசியல் விவகாரங்களைப் பத்திரிகைகள், வானொலி மூலமாகக் கேட்டறியாமல் இவர்கள் அரசாங்கத்துடன் நேரடியான ஒரு தொடர்பை வைத்திருப்பவர்கள். நாட்டின் சனத்தொகையில் 8சத வீதமான

### ''எமக்கு எதிரான சதி''

''புதிய அரசாங்க ஊழியர்கள் தமது இரண்டாந்தரப் பதவி உயர்வுப் பரீட்சையைத் தமிழ் மொழியில் எழுதக்கூடியதாக இருக்கும்போது அதற்கான விண்ணப்பப் பத்திரத்தை மட்டும் எதற்காகச் சிங்களத்தில் நிரப்பிக் கொடுக்க வேண்டும். இது வேண்டுமென்றே எமக்குச் செய்யப்படுகின்ற சதியாகும். எம்மை அடிமைப்படுத்துவதற்குக் கையாளப்படும் வழிமுறைகளுள் இதுவும் ஒன்றாகும். இந்த நாட்டில் தமிழரசாங்க ஊழியனின் நிலை இப்படியா போகவேண்டும்? இதைத் தீர்ப்பதற்குச் சங்கம் நடவடிக்கை எடுக்குமா?

இவ்வாறு திரு. கே. சிவலிங்கம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் 9வது ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது கேள்விக் கணைகள் தொடுத்துப் பேசுகையில் கூறினார்.

திருவாளர்கள் த. சோமசுந்தரம், கே. நடராஜபிள்ளை ஆகியோரும் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். திருவாளர்கள் ச. அ. செபரத்தினம், இ. அந்தோனிப்பிள்ளை, வே. குமரகுரு ஆகியோர் சங்கத்தின் சார்பில் கேள்விகளுக்கு விடையளித்தனர்.

## 'தரமற்ற ஏழைப்பத்திரிகைகளை முதல்தடைசெய்யவேண்டும்'

சுழிபுரம், ...ன்

'தென் இந்தியாவில் இருந்து வெளியாகும் பத்திரிகைகள் இலங்கைக்கு வருவதை கட்டுப்படுத்துவதாக தாங்கள் முடிவு செய்தால் ஏனைய நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மேலும் கட்டுப்பாடு செய்வதே நீதியாகும். வழக்கம்பரை தமிழ் மன்றத்தினர், தபால் மந்திரிக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு கூறியுள்ளனர். அவர்கள் மேலும் கூறியதாவது:

'தரம் குறைவு என்பதை முடிவு செய்வது வாசகர்கள்தான். விருப்பம் இல்லாததை யாரும் விரும்பி வாசிக்கமாட்டார்கள். இன்று இலங்கையில் தரம் குறைவான, வாசிக்க முடியாத சில பத்திரிகைகள் வெளியாகிக் கொண்டு இருக்கின்றன. முதலில் இவற்றை தடைசெய்ய வேண்டும்.

இன்று தாம் தான்பெரும் அறிஞர்கள், எழுத்தாளர்கள் பரிசுபெற்றவர்கள் எனக் கூறுபவர்கள், பின்கதவு வேலைபார்த்தும், எழுத்துப் பிழைகளுடனும் வசனப் பிழைகளுடனும் ஊர் அச்சகங்களில் அச்சுப்பதிவு செய்யக்கொடுத்த பத்திரங்களே சான்றாகும். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் குப்பைகளை தடைசெய்யும் வழியை நல்வழியில் செய்யுமாறு வேண்டுகின்றோம். இதற்கு நல் அறிஞர்கள் கொண்ட ஒருசபையையே முடிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### ''பாராயணம் செய்யவேண்டும்''

மட்டுவில், புதன்

''மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான தத்துவங்கள் கந்தபுராணத்தில் அடங்கியுள்ளன. ஒவ்வொரு தமிழனும் வீரனாகவும், விவேகியாகவும் விளங்க வேண்டுமாயின் கந்தபுராணத்தை பக்தியுடன் பாராயணம் செய்யவேண்டும்''

என்றிவ்வாறு நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவத்தின் முதலாம்நாள் நிகழ்ச்சியின்போது கந்தபுராண விரிவுரையை ஆரம்பித்துவைத்த சங்கீத பூஷணம் வினாசித்தம்பி கூறினார்.

### புதிய 10 சத முத்திரை

கோட்டை, புதன்

மக்கள் வெற்றித்தினத்தின் ஞாபகார்த்தமாக இம்மாதம் 25-ம்திகதி புதிய 10சதமுத்திரை வெளியிடப்படவிருக்கிறது.

இலங்கை நுண்கலைப்பகுதியைச் சேர்ந்த திரு. அல்பேட் ரத்தினசிறி இம்முத்திரைக்குரிய படத்தை வரைந்துதவினார். இம்முத்திரையில் காலஞ்சென்ற பிரதமர்திரு. பண்டாரநாயக்காவின் வாழ்க்கை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

இம்முத்திரை வெளியிடப்படும் பொழுது அதற்குரிய வெளியீட்டுத்திரட்டு சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் அமைந்திருக்குமென அறிய வருகிறது.

### பருப்புவகை இங்கு உற்பத்தி செய்ய முடியும்

யாழ்ப்பாணம் வியா

'துவரம் பருப்பு, மைசூர் பருப்பு ஆகிய முக்கிய உப உணவுப் பொருட்களை இந்த நாட்டில் உற்பத்தி செய்ய முடியும். எதிர்வரும் மழை காலத்தில் இந்தப் பருப்பு வகைகளை எமது விவசாயிகள் சகுபடி செய்ய ஒழுங்கு செய்யவேண்டும், இதற்கான விதைப்பருப்பை அரசாங்கம் கமத்தொழில் இலாகா மூலம் விநியோகம் செய்ய வேண்டும்' இப்படிக் கூறும்மகஜர் ஒன்றையாழ்ப்பாணம் விவசாயக் கழகத் தலைவர் திரு. சி. நவரத்தினம் விவசாய அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பிவைத்துள்ளார்

(கு. வி. ம.)

### இடமாற்றம் ரத்து

உடுப்பிட்டி, புதன்

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போபொறியியல் பணியக முகாமையாளரான திரு. டி. ஜீ. இத்துதாஸாவின் திடீர் இடமாற்ற உத்தரவு ரத்துச் செய்யப்பட்டுள்ளது. திரு. இத்துதாஸாவின் இடமாற்றத்திற்குப் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போபொறியியல் தொழிலாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததை தொடர்ந்து இவ்விடமாற்ற உத்தரவு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

...குறித்த சங்க அங்கத்தவர்களைப் புறக்கணிப்பதாயுள்ளது. இந்த நீதியீனத்தை ஆசிரியர் ஆலோசனைச் சம்மேளனத்துக்கும், கல்விப் பகுதிக்கும் தெரிவிக்க வேண்டியது எமது முக்கிய கடனாகும்.''

...வென்று பலரும் சுட்டிக்காட்டிப் பேசினார்கள்,

சங்க உபதலைவர் திரு. த. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சங்க வளர்ச்சிபற்றிய முக்கிய விஷயங்களபல ஆராயப்பட்டன,

## வல்லிபுரக் கோவில் திருவிழாவை சிறப்பாக நடாத்த முடிவு

நெல்லியடி, புதன்

வல்லிபுரக் கோவில் திருவிழா சம்பந்தமாக ஆராயும் பொருட்டு பருத்தித்துறை காரியாதிகாரியால் அண்மையில்கூட்டபபட்ட கூட்டமொன்றில் இம்முறை திருவிழாவை சிறப்பாக நடாத்துவதெனவும் தற்காலிக பொலிஸ் நிலையம், சுகாதாரக் கந்தோர் ஆகியவற்றை அமைத்து பக்தர்களின் நலனைக்கவனிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டதுடன் புதிய நிர்வாக சபையிடம் அடுத்தமாதம் 3-ம் திகதி கோவில் நிர்வாகத்தை ஒப்படைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் சுகாதாரப் பகுதியினரும், இ. போ. ச பையினரும், பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட கோவில் பரிபாலகர்களும் கலந்து கொண்டனர்.

வல்லிபுரக் கோவில் உற்சவம் இம்மாதம் 29-ம்திகதி கொடியேற்றுவைபவத்துடன் ஆரம்பமாகிறது அடுத்தமாதம் 13-ம் திகதி தேர்த்திருவிழாவும், 14-ம் திகதி சமுத்திரத்தீர்த்தமும் நடைபெற்று உற்சவம் பூர்த்தியாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.


### ஓய்வுபெறும் ஆசிரியர்கள்

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலைத் தலைமையாசிரியராகப் பணியாற்றிவரும் திரு. ஆ. இளையதம்பி இவ்வருட இறுதியில் தமது ஆசிரிய பதவியினின்றும் இளைப்பாறுகின்றார். 40 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் இப்பாடசாலையில் கடந்த 30 வருட காலமாகத் தொடர்பாகப் பணியாற்றிப் பாடசாலை வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்து வந்தார்.

0 0 0

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியராகப் பணியாற்றிவரும் திரு. சி. சதாசிவம்பிள்ளை இவ்வருட இறுதியில் ஆசிரிய பதவியினின்றும் ஓய்வுபெறுகின்றார்.

சிறந்த நிர்வாகத் திறமையும்-சைவசமயப் பற்றும் மிக்க இவ்வாசிரியர் நல்லூர் வட்டாரப் பாடசாலைத் தலைவர்கள் சங்கச் செயலாளராகவும் பணியாற்றுகின்றாரென்பது குறிப்பிடத்தக்கது.



அமெரிக்க பெண்மணி செல்வி ஹனிமன் தயாரிக்கும் வண்ணத்திரைப்படத்தில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம் பெற்ற வழிபாடு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ளன. ஆதீனகர்த்தர் சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் பூஜைவழிபாடுசெய்யும் இந்தக் காட்சியும் படத்தில் இடம் பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

இறைவனிடத்தே உனது மனத்தை நிறுத்துவாயானால் ஆத்மவிஷயமாக உனக்கு ஒருபோதும் அசுத்தம் உண்டாகாது. — ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna;
Post Box: 49, Jaffna: Telephone: 889;

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணிமாதம் 25-ந் திகதி (10-9-70)

## கினுக் கொல்லேச் சம்பவம்

பதுளை கினுக்கொல்லேத் தோட்டச் சம்பவம் பற்றிக் கிடைத்துவரும் செய்திகள் கல்மனதையும் கலங்கச் செய்யும். பொலிஸ் துப்பாக்கிப்பிரயோகத்தில் கொல்லப்பட்ட இரு வாலிபர்களின் சடலங்களும் மாநகரசபையின் குப்பை ஏற்றும் வண்டியில் எடுத்துச் சென்று புதைக்கப்பட்டதாகப் இலங்கை தோட்ட உத்தியோகத்தர்சங்க ஊவாக்கிளை பிரதமரிடம் அறிவித்து கவலையும் கண்டனமும் தெரிவித்திருக்கிறது. கொலையுண்ட இரு தொழிலாளரின் சடலங்களையும் மாநகரசபையின் குப்பை வண்டியில் எடுத்துச் சென்று புதைக்குமளவுக்கு இங்கு மனிதப் பண்பு ஏற்கனவே குழி தாண்டி புதைக்கப்பட்டுவிட்டதாவென்று ஐயுற வேண்டியிருக்கிறது. தொழிலாளர் மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய வேண்டிய அளவுக்கு அங்கு அப்படி நிலைமை மோசமடைந்திருந்ததா; துப்பாக்கிப்பிரயோகம் செய்யாமலே நிலைமையைச் சமாளித்திருக்கமுடியாதா? கொல்லப்பட்ட இரண்டு தொழிலாளரின் சடலங்களையும் மாநகரசபைக் குப்பைவண்டியில் கொண்டுசென்று புதைத்ததற்கு யார் காரணம்?

இவை பற்றி தகுந்த விசாரணை நடாத்தப்பட வேண்டும். பொலிசாரின் புலன்விசாரணையில் மக்களுக்கு நம்பிக்கையேற்பட முடியாது. நீதிவிசாரணைக் கமிஷன் ஒன்றை நியமித்து இச் சம்பவங்கள் பற்றி ஆராய்வது இரு சகதொழிலாளரின் உயிரைப் பலி கொடுத்ததுமல்லாமல் பலவித இன்னல்களை அனுபவித்துவரும் பாட்டாளி மக்களுக்குச் சற்றே ஆறுதலளிக்கும் இதுதவிர இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கவும் நீதிவிசாரணைக் கமிஷன் வழிவகுக்கலாம்.

கினுக் கொல்லேச் சம்பவம் பற்றி அரசாங்கம் அசமந்தமாக இருக்கக்கூடாது. உடனடியாக நீதிவிசாரணைக் கமிஷன் ஒன்றை நியமித்து உண்மை நிலையை அறிந்து தவறுசெய்தவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## வேலையற்றோர் கோரிக்கை

வேலையற்றோருக்கு இரண்டு கொத்து பங்கீட்டு அரிசியையும் இலவசமாகக் கொடுக்குமாறு 'ஸ்ரீலங்கா முன்னணி' என்ற பெயரில் வேலையற்றோர்கள் கேட்டுள்ள கோரிக்கை நியாயமானது மிகையென்று யாரும் கூற முடியாது.

பிரிட்டன் முதலிய நாடுகளில் வேலையற்றோருக்கு விசேஷ அலவன்ஸ் அளிக்கப்படுகின்றது. கணிசமாகவும் அது உள்ளதால், வேலையற்றோர் அதிகம் கஷ்டப்படத் தேவையில்லை. அந்தப் பிரச்னையை அரசாங்கம் இவ்விதம் சமாளிக்கிறது. ஆனால் இலங்கையிலே வேலையற்றவர்களுக்கு எவ்வித உதவியையும் அரசாங்கம் விசேஷமாக அரிசியை இலவசமாக அளிப்பதால் யாரும் பட்டினி கிடக்கத் தேவையில்லை. அரைவயிற்றுக்கஞ்சிக்காவது இடமுண்டு.

என்றாலும் வேலையற்றோர்பால் அரசாங்கம் விசேஷ அனுதாபம் காட்டவேண்டியது அவசியம். மற்றவர்களுக்கு இரண்டாவது கொத்து அரிசியை 75 சத வீதம் அரசாங்கம் விற்க இருக்கிறதெனினும், அந்த விலையைக் கொடுத்து அரிசி வாங்க வேலையற்றோரால் முடியாது. ஆகவே அவர்களுக்கு இரண்டு கொத்து அரிசியையும் இலவசமாக அளிப்பதன் மூலம், அரசாங்கத்துக்கு முக்கால் ரூபாய்தான் நஷ்டம். இதனால் வேலையற்றதுரதிஷ்ட சாலிகள் பட்

# தமிழ் மாணவர்கள் சிங்களம் படிப்பதில் அவசரம் தேவையா?

யாழ்ப்பாணத்திலே இரு கல்லூரிகளில் சிங்களத்தை இஷ்ட பாடமாகப் போதிக்கத் தலைமை ஆசிரியர்கள் முற்பட்டதும் அதைநிறுத்தி வைக்குமாறு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ், ஜே. வி. செல்வநாயகம் தந்திமூலம் கேட்டுக் கொண்டு தாம் நேரே வந்து பேசுவதாகத் தெரிவித்தார். சிங்களத்தை அரசாங்க மொழியாக ஒப்புக் கொண்ட ஒரு கட்சியினர் அந்த மொழியை இஷ்ட பாடமாக தமிழ் மாணவர்கள் கற்கக் கூடாதென்று தடுப்பானேன்? இதனால் தமிழ் மாணவர்கள் அரசாங்க உத்தியோகம் பெற முடியாமல் தவிக்கமாட்டார்களா? என்ற கேள்விகள் எழுகின்றன.

தமிழரசுக்கட்சி மட்டுமல்ல தமிழ்க் காங்கிரஸ் கட்சிகூட சிங்கள போதனையைப்பற்றி இதுவரைசாதகமாக ஒன்றும் கூறவில்லை சிங்களம் கற்காததால்தமிழ் மாணவர்களுக்குத்தான் பாதகமென்பது இவ்விரு கட்சித் தலைவர்களுக்கும் தெரியாததல்ல. என்றாலும் இதற்கு அவர்கள் சம்மதிக்காததற்கு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும்.

இந்நாட்டில் பெரும்பான்மை மக்கள் பேசும் மொழியான சிங்களம் யாழ்ப்பாணக் கல்லூரிகள் பலவற்றில் சில வருடங்களுக்கு முன்பாகக் கற்பிக்கப்பட்டு வந்தது. தமிழும் அப்போது ஓர் அரசாங்க மொழியாக அங்கீகரிக்கப்பட்டு சுமார் பத்து வருட காலத்துக்கு அப்படியே இருந்து வந்தது அரசியல் காரணங்களால் தமிழுக்கிருந்த அந்த அங்கீகாரத்தைத் திடீரென நீக்கி சிங்களம் மட்டும் அரசாங்க மொழி என்று சட்டம் நீதியின்றி நிறைவேற்றப்பட்டதும் யாழ்ப்பாணக் கல்லூரிகளில் சிங்கள போதனையையும் நிறுத்திவிட்டனர். தங்கள் மொழிக்கு ஏற்பட்ட அவமதிப்பு தங்களுக்கே செய்யப்பட்டதாகக் கருதி தங்கள் தன்மானததைக் காத்துக் கொள்ளவும் தங்கள் ஆட்சேபத்தைத் தெரிவிக்கவும் யாழ்ப்பாணக் கல்லூரிகளில் சிங்களமொழி போதனையை நிறுத்தினர். கள் ஒப்புக் கொண்டபின்பும் ஏன் தமிழ் மாணவர்கள் சிங்களம் கற்க முடியாமல் அவை குறுக்கே நிற்கின்றன என்பது முக்கிய கேள்வி. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் தமிழ்த் தலைவர்களின் போக்கு

"தமிழன்"

முரண்பட்டதாகவும் தமிழருக்குப் பாதகமாகவும் தோன்றக் கூடும். ஆனால் மானம் பெரிதா? வயிறு பெரிதா? தமிழ் சமூகத்துக்கு மானம்தான் பெரிது என்று பதிலளிப்பவர்கள் தமிழ்த் தலைவர்களின் கருத்தைத் தவறென்று மறுக்க முடியாது. எக்காரணத்தால் யாழ்ப்பாணக் கல்லூரிகளில் சிங்கள வகுப்புகள் நிறுத்தப்பட்டனவோ அந்தக் காரணம் இன்னும் மாறவில்லை அவ்வித நிலையில் மீண்டும் அம்மொழி போதனையை ஆரம்பிப்பதாயின் அதனால் தமிழர் தன்மானம் இழப்பதுடன் தமிழ்மொழியின் உரிமையும் அந்தஸ்தும் உயர முடியாமற் போகுமென்றும் தமிழ்த் தலைவர்கள் அஞ்சுவதற்கு இடமுண்டு.

கல்லூரிகளில் அநேகமாக எல்லாம் அரசாங்க நிர்வாகத்துக்குக் கைமாறிவிட்டதால் கல்வி அமைச்சர் ஓர் உத்தரவு போட்டு சிங்களத்தை தமிழ்ப்பகுதிகளிலுள்ள கல்லூரிகளில் கட்டாயமாகக் கற்பிக்குமாறு செய்ய முடியும். ஆனால் அரசாங்கமும் தமிழ் மக்களின் உணர்ச்சியை மதித்து அவ்விதம் செய்யவில்லை. கட்டாயமின்றி இஷ்டபாடமாக சிங்களத்தைக் கற்றாலென்ன என்ற கேள்வியும் எழலாம். சிங்களம் மட்டும் அரசாங்க மொழியாகியுள்ள நிலையில் அதை இஷ்ட பாடமாக வைத்தாலும் எல்லா மாணவரும் அதைக் கற்க முன்வரக் கூடும். தமிழ் மொழிக்கான உரிமைப் போராட்டம் இன்னும் முடியாத ஒருநிலையில் அவ்விதம் செய்வது தமிழ்ப் பேசும் சமூகத்தின் நீடித்த நன்மைக்கு உகந்ததாகுமா என்பதையும் கவனிக்க வேண்டும்.

நல்ல வேளையாக அரசியல் நிர்ணயசபை இப்போது கூடி மொழிப் பிரச்னை உள்ளிட்டு எல்லா விஷயங்களையும் அடியோடு புனராலோசனை செய்துவருகிறது. சில மாதங்களுக்குள் இம்முக்கிய வேலையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பது அரசாங்கத்தின் ஆவல். இச்சமயத்தில்தமிழ் மொழியின் உரிமையிலும் தமிழரின் தன்மானத்திலும் அக்கறையுள்ள தலைவர்கள் எல்லாரும் ஒருமுகமாக அச்சபையில் சேர்ந்து வற்புறுத்துவராயின் இழந்த உரிமையை மீண்டும் சீக்கிரத்தில் பெற இப்போது அதிக வாய்ப்புண்டு. இதுவரை பொறுத்திருந்தவர்கள் இன்னும் சில மாதங்கள் தமிழ் சமூகத்தின் நீடித்த நன்மையைக் கருதி பொறுத்திருப்பதால் நஷ்டத்தைவிட இலாபமே அதிகமிருக்கக்கூடும். இதற்கிடையில் மொழி விஷயமாக தமிழர்பால்கூட்டரசாங்கம் சற்றே தாராள மனப்பான்மை காட்டுவதற்கான அறிகுறிகள் தோன்றுவது நம்பிக்கைக்கு இடமளிப்பதாக உள்ளது.

# அரசியல் உரிமை இல்லாமல் பொருளாதார சுதந்திரம் வராது

## தமிழ் பெரியார் தினவிழாவில் அமிர்தலிங்கம் உரை

வெள்ளவத்தை புதன்

"தமிழர்களுக்கு என்றுஒரு நடுஇல்லாதகாரணத்தினல் தான் தமிழினம் இன்று பல்வேறு நாடுகளிலும் பரந்து சிதறி அவலப்பட்டு வாழ வேண்டியிருக்கிறது. கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்னர் நீர்கொழும்பு, சிலாபம் பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் இன்று எவ்வாறு தமிழை மறந்து சிங்களவர்களாக மாறியுள்ளார்களோ அதே போலத்தான் இன்னும் 50 அல்லது 100 ஆண்டுகளின் பின்னர் நாங்களும் மாற வேண்டிய[illegible]லை ஏற்படும். இதை எதிர்பார்த்து நாம் விழிப்போடு செயலாற்ற வேண்டும். அப்படி ஒரு காலம் வரும்போது நாம் இந்த மண்டபத்தில் பாரதி விழா கொண்டாட முடியாது"

இவ்வாறு முன்னைள் வட்டுக்கோட்டை ஆட்சிமன்றப் பிரதிநிதியும் தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளருமான திரு. அ அமிர்தலிங்கம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்ப் பெரியார்கள் தின விழாவில் பேசுகையில் கூறினர்

இலங்கைத் தமிழர் பண்பாட்டு வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற இவ்விழாவில் திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து கூறியதாவது:-

இன்றைய பலன்

## வடமராட்சியில் மிருகவைத்தியசாலை

நெல்லியடி, புதன்

வடமராட்சியில் அரசினர் மிருகவைத்தியசாலைக்கென்று 55,000 ரூபா செலவில் மந்திகையில் ஒரு புதிய கட்டிடம் கட்டப்பட்டு வேலைகள் யாவும் பூர்த்தியாகி விட்டன.

— —

## திருட்டு

முல்லைத்தீவு: புதன்

முல்லைத்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தினல் நடத்தப்படும் முல்லைத்தீவு பெட்ரோல்நிலையத்தில் ரூபா 750வரை கள





# பிரதமர் ஸ்ரீமாவும் பிரதமர் இந்திராவும்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஆட்சிப்பொறுப்பு வகிக்கும் பிரதமர்கள் இருவரும் பெண்கள். இருவருக்கும் அரசியலில் ஒரேவிதமான பிரச்னை ஏற்பட்டது இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த அரசாங்கம் கொண்டுவந்த மசோதா பார்லிமெண்டில் நிறைவேறியதென்றாலும் செனேட் சபையில் தோற்றது. அதேபோல இந்தியாவிலும் அரசியல் சட்டத் திருத்த மசோதா லோகசபையில் நிறைவேறி, ஒரே ஒரு வக்கினல் ராஜ்யசபையில் தோற்றுள்ளது.

இத்தோல்வியால் இலங்கை செனேட்சபையையே கலைத்து பழிவாங்கலாமென்றும், அல்லது இம்மசோதாவை மீண்டும் பார்லிமெண்ட் சபையில் கொண்டுவந்து நிறைவேற்றி சட்டமாக்கலாமென்றும் வதந்திகள் அடிபட்டன, ஆனல் அப்படி எதுவும் செய்யாமல். அந்த மசோதாவையே

## ஐயாறன் எழுதுவது

ஸ்ரீமாவிஸ் அரசாங்கம் விவேகத்துடன் கைவிட்டது. தங்கள் கட்சியைச் சேர்ந்த ஒரு எம். பி. யின் பதவியை காப்பதற்காகவே அம்மசோதாவை இலங்கை அரசாங்கம் கொண்டுவந்தாலும் செனேட்சபை செய்த முடிவை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, தங்கள் கட்சி நலனைக் கைவிட்டது நல்லதோர் ஜனநாயக முன்மாதிரியாகும்.

இந்தியாவிலே சமஸ்தான மன்னர்களின் பென்ஷன் சலுகைகளை நிறுத்திவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் கூடிய அரசியல் திருத்த மசோதா ராஜ்யசபையில் தவக்கப்பட்டதால் பல அரசாங்க மெம்பர்கள் டில்லிக்கு தக்கசமயத்தில் வரமுடியாது போயிற்று. தி மு க. வைச் சேர்ந்த எஸ். எஸ். ராஜேந்திரனும் சில விநாடிகள் தவங்கியதால். அவர் சபைக்குள்ளே வாக்களிக்க நுழைய முடியாமல் போயிற்று. இன்றேல் இம்மசோதா நிறைவேறியிருக்கும்.

மசோதா தோல்வி அடைந்தாலும் ஜனதிபதியின் விசேஷ அதிகாரத்தால் மேற்குறித்த பென்ஷன் சலுகைகளை நிறுத்திவிட உத்தரவிட்டுள்ளனர். ஆனல் இவ்விஷயமாக ஸ்ரீமா சென்ற வழியிலே பிரதமர் இந்திரா செல்லவில்லை. அவர் ஜனநாயக தர்மத்தை மீறி எதேச்சாதிகாரமாக நடப்பதாயும், இந்தியாவில் மீண்டும் பொதுத்தேர்தல் நடத்த வேண்டுமென்றும் பல இந்தியப் பத்திரிகைகள் எழுதுகின்றன

0 0 0

லோகசபையிலே பிரதமர் இந்திராவுக்கு மெஜாரிட்டி பலம் இல்லை. தி. மு. க., கம்யூனிஸ்ட் கட்சிகள் முதலியவற்றின் ஆதரவாலேயே அவர் ஆட்சியில் இருக்க முடிகின்றது. ஆனல் இலங்கையிலே பிரதமர் ஸ்ரீமாவுக்கு பார்லிமெண்டில் அசைக்கமுடியாத மெஜாரிட்டி பலமுள்ளது. பிரச்னைகளும் அதிகமில்லை, இருவர் நிலையையும் ஒப்பிடும்போது. இந்திய பிரதமர் இந்திராவை விட இலங்கை பிரதமர் ஸ்ரீமாவின் நிலைமை எவ்வளவோ மேலாகும். இந்தியாவின் பிரச்னைகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையை மிக அதிர்ஷ்டம் செய்த நாடென்றே கருத வேண்டும். பார்லிமெண்டில் மெஜாரிட்டி பலம் இல்லாமலும். கட்சி ஆதரவாளர்களே எதிரிகளாக மாறியும். பல பிரச்னைகளை சமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டப்படத் தேவையில்லை. அந்தப் பிரச்னையை அரசாங்கம் இவ்விதம் சமாளிக்கிறது. ஆனால் இலங்கையிலே வேலையற்றவர்களுக்கு எவ்வித உதவியையும் அரசாங்கம் விசேஷமாக அளிக்கவில்லை. இந்தியாவுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் நிலைமை சற்றே மேலாகும். இந்தியாவில் வேலையில்லை என்றால் அநேகமாகப் பட்டினிதான். இலங்கையிலே பொதுமக்களுக்கு, வாரத்தில் ஒரு கொத்து

முடியாது. ஆகவே அவர்களுக்கு இரண்டு கொத்து அரிசியையும் இலவசமாக அளிப்பதன் மூலம், அரசாங்கத்துக்கு முக்கால் ரூபாய் தான் நஷ்டம். இதனால் வேலையற்ற துரதிஷ்டசாலிகள் பட்டினி கிடக்காமல் பாதுகாக்கப்படுவதுடன் இந்தப் பிரச்னையைத் தீர்க்க இது நல்லதோர் முதற்படியாவதுடன் வேலையற்ற ஏழைகளின் நன்றிக்கும் அரசாங்கம் பாத்திரமாகும்.

அவமதிப்பு தங்களுக்கே செய்யப்பட்டதாகக் கருதி தங்கள் தன்மானததைக் காத்துக் கொள்ளவும் தங்கள் ஆட்சேபத்தைத் தெரிவிக்கவும் யாழ்ப்பாணக் கல்லூரிகளில் சிங்களமொழி போதனையை நிறுத்தினர்.

அரசாங்க மொழியாகிய சிங்களத்தைக் கற்காததால் தமிழ் மாணவர்களுக்கு அரசாங்க வேலைகள் கிடைக்க முடியாதபடியும் கிடைத்த வேலைகளையும் இழக்கும்படியும் நிலைமை உள்ளது. சிங்களத்தை அரசாங்க மொழியாக தமிழ் அரசியல் கட்சி

# "இலங்கை அல்லது ஈழம் என்றபெயரே வழங்க வேண்டும்"

## மத்தியவங்கி தமிழ் இலக்கிய மன்றம் கோரிக்கை

கோட்டை, வியாழன்

இலங்கை மத்திய வங்கித் தமிழ் இலக்கிய மன்றத்தின் ஐந்தாவது ஆண்டுக் கூட்டம் இன்று இலங்கை மத்தியவங்கிக் கட்டிடத்தில் 9-ம் மாடி வடகோபுரம் அவைக்களத்தில்நடைபெறுகிறது. இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் விருக்கின்றன.

**கண்டனம்**

1. வங்கியாளர் பயிற்சி நிலையம் எம் வேண்டுகோளை ஏற்று சென்ற மேத் திங்களில் வங்கியாளர் பயிற்சித் தேர்வை தமிழில் நடாத்த முன்வந்தது போல் காலம் தாழ்த்தாது வங்கியாளர் பயிற்சி வகுப்புக்களையும் தமிழில் நடாத்துமாறு பயிற்சி நிலயத்தை இப் பேரவைவற்புறுத்திவேண்டுகிறது. சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் வகுப்புகளை நடாத்தும் இந்நிலையம் வங்கித்துறையில் பணியாற்றும் தமிழ்ஊழியர்களை முற்ருகப் புறக்கணித்து ஒத்த வாய்ப்பை அளிக்க மறுக்கும் முறையல் நாம் தொடர்ச்சியாக விடுத்த வேண்டுகோளை நிலையம் நிராகரித்தது அரசாங்கத்தில் மொழிக் கொள்கைக்கும் மாறுபட்ட ஓரவஞ்சச் செயல் என்று மிக வன்மையாக கண்டிக்கிறது.

**வேறுபாடு வேண்டாம**

2. அரசாங்க பணியில் சேர்ந்துள்ள புதிய தமிழ் ஊழியர்கள் அனைவரும் நிதிச்சட்டங்கள் நிருவாக அறிக்கைகள் அனைத்தையும் தமிழில் பெற உரிமை பெற்றிருக்கையில் மத்திய வங்கியின் சட்டதிட்டங்களை விளக்கி ஊழியர்களுக்கு வழிகாட்டியாக அமையும் வங்கிக் கைநூலை சிங்களத்தில் தேர்ச்சி பெற்ற தமிழ் ஊழியர்களுக்கு சிங்களத்தில் தேர்ச்சி பெற்றவர் என்ற ஒரே காரணம் கொண்டு தமிழில் வழங்க மத்திய வங்கி ஆட்சிப்பீடம் மறுத்துள்ளதைத வன்மையாக கண்டிப்பதோடு அவற்றை உடன் தமிழில் புதிய தமிழ் ஊழியாகள் அனைவருக்கும் எவ்வித வேறுபாடும் காட்டாது வழங்கும்படி இப் பேரவை தீர்மானிக்கிறது.

**இலங்கை, ஈழம்**

3. இலங்கை, ஈழம் என இலக்கிய நூல்களிலும், வரலாற்று ஏடுகளிலும் தமிழர்கள் தொன்று தொட்டு வழங்கிவந்த பெயர்களை நீக்கி உருவாக இருக்கும் தமிழில் அமையும் நாட்டின் குடியரசு சட்டத்திலும் சிறிலங்கா என்ற பெயரை இட முன்வந்துள்ள அரசாங்கத்தின் கொள்கை எம், மொழியின் தனித்தன்மையை இழக்கச் செய்கிறது. என்று சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அத்துடன் அரசாங்கம் இந்நாட்டை குறிக்க இது காலவரையில் அரசாங்கச் சின்னங்களில் கூட இலங்கை என்ற பெயரையே தொடர்ச்சியாக கையாண்டு வந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டி இக்காரணங்கள் கொண்டு இனி உருவாக இருக்கும் தமிழில் அமையும் குடியரசுச் சட்டத்தில் இலங்கை அல்லது ஈழம் என்றபெயரே இடம்பெற வேண்டுமென்று அரசியல் சட்ட அலுவல்கள் அமைச்சரையும் அவர் ஊடாக அரசாங்கத்தையும் வேண்டி நிற்கிறோம்

**எதிர்ப்பு**

4 குடியாட்சி அரசியல் அமைப்பின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்யும் முறையிலும் ஒற்றுமை நாட்டி நிறுவனத்தின் சட்டதிட்டங்களுக்கு முரண்படு முறையில் தமிழர்களின் அறிவு வளர்ச்சி தடைவிதிக்கும் நோக்குடனும் தென்னகத்திற்கும் ஈழத்திற்கும் இடையில் உள்ள மொழி, பண்பாட்டு கலை உறவை துண்டிக்கும் நோககுடனும் தமிழகத்தில் இருந்து இங்கு இறக்குமதியாகும் தமிழ் வெளியீடுகளை அரசாங்கம் தடைவிதிக்கும் எண்ணத்துடன் செயற்படுவதை இப் பேரவை தனது முழுவலிவுடன் எதிர்க்கிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

19 வயது

## இளம் பெண் தற்கொலை

வல்வெட்டித்துறை, புதன்

பருத்தித்துறை கலட்டியைச் சேர்ந்த கிருஷ்ண பிள்ளை மகள் அநுசூரியா (19 வயது) வீட்டில் ஏற்பட்ட மனக்கவலை காரணமாக கிருமிநாசினி அருந்தி தற்கொலைசெய்துள்ளார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் விசாரணையின்பின் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

வேண்டிய... நிலை ஏற்படும்.

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 25-ம் திகதி (10-9-70)

மேஷம்- அறவழியில் நாட்டம் பிறக்கும். தாராள சிந்தை மேலிடும். மதிப்பு உயரும். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும்.

ரிஷிபம்- பகைமூட்டம் வட்டமிடும். வீணை வார்த்தைகளால் மனம் புண்படும்.

ரிஷிபம்- பகைமூட்டம் வட்டமிடும். வீணை வாரித்தைகளால் மனம் புண்படும். மனத்திடம் வேண்டும்.

மிதுனம்-சந்திப்பின்மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வீர்கள் மகிழ்ச்சியான தினம்.

கடகம்- புதிய தலையிடி தலைதூக்கும் மாணவர்கள் உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

சிம்மம்- புதிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு இன்று நலம். மாணவர்களாயின் கல்வியில் அதிக ஆர்வம் பிறக்கும்.

கன்னி- சொந்தமாக தொழில்செய்வதில் ஆர்வம் பிறக்கும். எதிலும் முன்னணியில் நிற்பீர்கள்.

துலாம்- பொருள் ஈட்டுவதில் புதிய வழிகளை கையாளுவீர்கள். உத்தியோக உயர்வும் கிடைக்கும்.

விருட்சிகம்- கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும், முன்னேற்றத்தை முறியடிப்பதற்குச் சிலர் முனைவர். அவதானம் வேண்டும்.

தனுசு- வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். திடீர் பிரயாணத்திற்கும் இடம் உண்டு. சுகாதாரம்வேண்டும்,

மகரம்- இலட்சியவாதிகளுக்கு இன்று சிறப்பான தினம் புண்ணிய விருப்புக்கும் இடம் உண்டு.

கும்பம்- எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக்கூடும். மௌனம் நன்று.

மீனம்- இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று சிறப்பான தினம். கல்வியிலும் அபிவிருத்தி தென்படும்,

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

கள் தின விழாவில் பேசுகையில் கூறினார்

இலங்கைத் தமிழர் பண்பாட்டு வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற இவ்விழாவில் திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து கூறியதாவது:-

நானும் 20 வருடங்களின் முன்னர் உணர்ச்சிவசப்பட்டுப் பேசியவன்தான். வெறும் உணர்ச்சி வேலை செய்யாது. செயல்திறன் வேண்டும். மக்களைச் சிந்திக்கத் தூண்டும் வகையில் எமது பேச்சுகள் அமைய வேண்டும். அரசியல்உரிமை இல்லாமல் எந்த ஒரு இனமும் பொருளாதார சுதந்திரத்தை அடையமுடியாது. முதலில் தமிழர்கள் அரசியல் சுதந்திரம் பெறவேண்டும். அதற்காக ஓயாது போராடவேண்டும் அமரர் வன்னியசிங்கம், பாரதி, அறிஞர் அண்ணு ஆகியோர் போற்றி வளர்த்த தமிழை அவர்கள் எமக்களித்த மூச்சைக் கருத்திலே கொண்டு நாமும் மறத்தமிழர்களாகச் செயற்படவேண்டும்.

'வன்னியர் இன்றிருந்தால்' என்ற தலைப்பில் வழக்குரைஞர் திரு. மு. திருநாவுக்கரசு பேசுகையில், 'ஏழைகளின் தொண்டன் தமிழ் மொழி உரிமைக்காக உயிர் மூச்சையே கொடுத்தவர். மொழிக்கும் இனத்திற்கும் உரிமை கேட்பது தேசத் துரோகம் என்று தூக்கிலிடப்பட்டால் அதற்காக முதலில் தூக்குமரத்தில் தொங்குபவன் நான்தான் என்று மார்தட்டிக் கூறிய செம்மல் கோப்பாய்க் கோமான் வன்னியன்' என்றார்.

வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம் தலைமையில் 'அண்ணு' என்ற பொருள் பற்றி நடைபெற்ற கருத்தரங்கில் திருவாளர்கள் க. நவசோதி, கரிகாலன், கரவை கிழான் ஆகியோரும் செல்விகள் சாந்தினி லோகிதராசா டாக்டர்கலாநிதி தேவா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தியத் தூதரகத்தின் சினிமாப்படமும் காண்பிக்கப்பட்டது.

## சாட்டி மாதாகோவில் உற்சவம்

நாரந்தனை, புதன்

வேலணை - சாட்டி மாதா கோவில்வருடாந்தஉற்சவம் இம்மாதம் பதின்மூன்ரும் திகதி கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகிறது. உற்சவம் இம்மாதம் 24-ம் திகதி திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் முடிவடையும்.

## திருட்டு

முல்லைத்திவு: புதன்

முல்லைத்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தினால் நடத்தப்படும் முல்லைத்தீவு பெட்ரோல்நிலையத்தில் ரூபா750வரை களவாடப்பட்டுவிட்டதாக முல்லைத்திவுப் பொலிசில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

## சுருட்டுக் கைத்தொழில்

தாவடி, புதன்

''சுருட்டுகைத் தொழிலை அபிவிருத்தி செய்து சுருட்டுக்களை பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து சுருட்டுத் தொழிலாளர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை நிவர்த்தி செய்வதற்கும் புகையிலை உற்பத்திசெய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கவும்சுருட்டுக் கைத்தொழிலை கூட்டுத்தாபன மாக்குமாறு கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சா மூலம் அரசாங்கத்தை வேண்டியுள்ளது இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கம்''.

தாவடியில்உள்ளஇலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கக் காரியாலயத்தில் நடைபெற்ற வருடாந்தக் கூட்டத்தில் மேற்படி கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

வழக்கறிஞர். திரு. க. சோமஸ்கந்தனின் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. சி. முதலியார் பேசுகையில் - சுருட்டுத் தொழிலை கூட்டுத்தாபன மாக்குவதன் மூலம் தான் ஏழைத்தொழிலாளர்விமோசனம் அடையலாமென்றும் இலங்கைச் சுருட்டுக்களை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய வேண்டுமென்றும் கூறினர்.

## இந்திய தூதுக்குழு

கோட்டை, புதன்

இந்திய விமானப்படையைச் சேர்ந்து தூதுக்குழுவொன்று இலங்கை வந்து சேர்ந்துள்ளது. இத்தூதுக் குழுவில் இந்திய விமானப் படையைச் சேர்ந்த 4 அதிகாரிகள் உள்ளனர்.

இலங்கை விமானப்படையோடு கூட்டுமுயற்சி மேற்கொள்ளுவது குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவே மேற்படி தூதுக்குழு இலங்கைவந்து சேர்ந்துள்ளது. நேற்று இத்தூதுக்குழுவும் இலங்கை விமானப் படை அதிகாரிகளும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளனர்.

நலனைக் கைவிட்டது நல்லதோர் ஜனநாயக முன்மாதிரியாகும்.

இந்தியாவிலே சமஸ்தான மன்னர்களின் பென்ஷன் சலுகைகளை நிறுத்திவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் கூடிய அரசியல் திருத்த மசோதா இந்தியலோக சபையில் மூன்றல் இரண்டு பங்கு வாக்கைப் பெற்று நிறைவேறியது. ராஜ்ய சபையில் ஒரே ஒரு வாக்கினல் இம்மசோதா தோற்றது. கல்கத்தாவிலிருந்து பறந்துவந்த விமானம் வழி

## சலவைத் தொழிலாளர் கஷ்டம்

நாரந்தனை, புதன்

ஊர்காவற்றுறை — வேலணைவீதியில்இரண்டாம் 3-ம் கட்டைகளுக்கிடையில் அமைந்துள்ள இரண்டு குளங்களில் நீர்வற்றி விட்டதால் இப் பகுதி சலவைத் தொழிலாளர் பெரிதும் கஷ்டமடையவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள சலவைத் தொழிலாளர் தூரஇடங்களிலுள்ள குளங்களை நாடிப்போக முடியாதுள்ளதால்வருவாய் இன்றிக் கஷ்டப்படுவதாகக் கூறுகின்றனர். இக் குளங்கள் ஆழமாக்கப்பட்டால் போதிய நீரைத் தேக்கி வைக்கமுடியுமெனவும் வருடம் பூராவும் தங்கள்தொழிலுக்கு தண்ணீர் போதுமானதாய் இருக்குமெனவும்அவர்கள் கூறுகின்றனர்,

......

## புதிய ரக நெல்

யாழ்ப்பாணம், வியாழன்

அரசாங்க கமத்தொழிற் பகுதி இவ்வருடம் ஒரு புது ரகமான நெல்லை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. இந்தப் புது விதை நெல் இந்தியா, ஜப்பான், தாய்லாந்து, சீனு, பர்மா முதலிய நாடுகளில் விதைத்துப் பலன் எடுத்ததாகவும் விவசாயப் பகுதியின் அறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் எச்-4 எஸ் ஆர், ஐ ஆர்-8 முதலிய நெல் வகைகளினுல் நல்ல விளைச்சலைப் பெற்றுள்ள விவசாயிகளுக்கு மேலும் கூடுதலான நெல்லைப் பெறுவதில் ஆவலிருக்கும்.

ஆகஸ்ட் மாதப் பிற்பகுதியிலும், செப்டெம்பர் மாத நடுப் பகுதியிலும் வயல்களைப் பண்படுத்தி, காலா காலத்தில் விதைத்துப் பயன் பெறும்படியும், விதைநெல்லைக் கமத்தொழிற் பகுதியாருடன் தொடர்பு கொண்டு பெறும்படியும் அறிக்கை மூலம் கேட்கப் பட்டுள்ளனர். (கு.வி.ம.)

டன் ஒப்பிடுகையில் இலங்கையை மிக அதிர்ஷ்டம் செய்த நாடென்றே கருத வேண்டும். பார்லிமென்டில் மெஜாரிட்டி பலம் இல்லாமலும். கட்சி ஆதரவாளர்களே எதிரிகளாக மாறியும். பல பிரச்னைகளை சமாளிக்கவும் வேண்டியுள்ள பிரதமர் இந்திர வுக்கு எங்கிருந்துதான் தைரியம் வருகிறதோ! வேறு ஒருவராக இருந்தால் இதற்குள் பதவியை விட்டு விலகி ஓடியிருப்பார் அல்லவா?

0 0 0

## புகையிலைச் செய்கை கைவிடப்படலாம்?

நாரந்தனை, புதன்

சென்ற வருடம் செய்கை பண்ணப்பட்ட புகையிலை வீட்டில் தேங்கிக்கிடப்பதால் இம்முறை புகையிலைச் செய்கையை கைவிடுவதென இப்பகுதி விவசாயிகள் பலர் முடிவுசெய்துள்ளதாகத் தெரியவருகிறது. சின்னவெங்காயததையும், மிளகாயையும் பெருமளவில் உற்பத்தி செய்வதற்கு இவர்கள் முயற்சி எடுத்து வருகிருர்கள்.

......

**விவசாயப்படை**

## சம்பளத்தை உடனே வழங்குக

ஆனையிறவு, புதன்

விஸ்வமடு விவசாயப் படைவீரர்களினதும், உத்தியோகத்தரினதும் சம்பளத்தை உடனடியாக வழங்கும்படி விஸ்வமடு முகாம் பொறுப்பதிகாரி திரு. என் விஸ்வநாதன் விவசாயப் படை ஆணையாளருக்கு அவசரத் தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார் விஸ்வமடு விவசாயபடைவீரர்கள் தினமும் மேற்படி பொறுப்பதிகாரியின் இல்லத்திற்குச் சென்று சம்பள விஷயத்தில் கரைச்சல் கொடுத்து வருகிருர்களாம்.

......

## 'விஞ்ஞான அறிவு பெறவேண்டும்'

மட்டுவில், புதன்

'விஞ்ஞானம் மனித மனதைப் பண்படுத்தக்கூடியது வாழ்க்கையைச் சீராக நடாத்த துணைபுரிவது. உள்ளவற்றை உள்ளவாறே தெளிவுபடுத்துவது. எனவே மாணவர்கள் அவசியம் விஞ்ஞான அறிவுபெறவேண்டும் என்றிவ்வாறு மீசாலை வீரசிங்கம் வித்தியாலயத்திற்கான விஞ்ஞான கூடத்திற்கு அடிக்கல் நாட்டு வைபவத்தில் பேசிய மேற்படி பாடசாலை அதிபர் திரு. செ. சிவலிங்கம் குறிப்பிட்டார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org